ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம். இஞ்சு ஒன்றுக்கு 1-0 0. சர்க்கார் கோர்ட்டு 2-0-0	**திராவிடநாடு**	வருடசந்தா ரூ. 5—0—0 ஆறுமாதம் ரூ. 2—8—0 தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 காஞ்சிபுரம் 23—4—44 இதழ் 7.

தமிழ் விருத்தியடையவழி!

தமிழைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய நான் பண்டிதனல்ல. கீழே சொல்லுவதையும், நடந்துவரும் அனுபோகத்தையும் ஆலோசித்துப்பாருங்கள். குடிஅரசுப் பத்திரிகையைப் படிக்கப் பயந்து அருவருப்புக்கொள்ளும் பண்டிதர்கள் உங்கள் பக்கமிருந்தால் படித்துக்காட்டுங்கள். அவர்கள் அபிப்பிராயத்தையும் தெரிந்து ஒத்துப்பாருங்கள். மதப்பற்றும் பயமும் உடையவர்களானாலும், அவர்களின்விவேகம் அவர்களைப்பொது அறிவிறகு இழுத்துச்செல்லுவதை அவர்களால் தடுக்கமுடியாது, பயந்தவர்களாகவிருந்தாலும்உண்மையை விவேகம் உணர்த்தியே தீரும்.

தமிழை வளர்க்கவேண்டும், விருத்தி பண்ணவேண்டும் என்று தமிழ் அபிமானிகளும் பண்டிதர்களும், சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். ஒருவர் சொன்னதை இன்னொருவர் பின்பற்றிக் கிளிப்பிள்ளைபோல் பாடம் ஒப்பிக்கிறார்களேயல்லாமல் தமிழில் இன்னகுறைபடிந்திருக்கிறது, அதைநீக்குவதற்கு இன்னது செய்யவேண்டும் என்பதின் மூலத்தை அறிந்தவர்கள் சொற்பம். அதிலும் வெளியிட்டவர்கள் சொற்பத்திலும் சொற்பம்.

ஆங்கில பட்டதாரிகளான தமிழ்ப்பண்டிதர்கள். ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களைக்கொண்டும், கல்வெட்டு சாதனங்களின் ரிப்போர்ட்டுகளைக்கொண்டும், தமிழ் ஆராய்ச்சி என்று எழுதியும், பிரசங்கம்செய்தும் வருகிறார்களேயல்லாமல், தமிழின் குறைபாடுகள்தெரிந்தவர்களாகத் தெரியவில்லை. மூலத்தின் குறைபாடுகளைத் தெரிந்து அதைவெளியில்சொல்லுபவர்களே தெரிந்தவர்கள். தெரிந்திருந்தாலும் கோழைகளால்பலன் என்ன?

தமிழ்மொழி எழுத்தில், வடிவத்தில் பதத்தில், சேர்க்கையில், சத்தத்தில், இலக்கியத்தில், இலக்கணத்தில், அதன் அமைப்புகளில், அர்த்தத்தில், ஏதாவது குறைபாடுகளிருக்கிறதா? இவைகளில் ஏதேனும் குறைபாடுகளிருக்குமேயானல் அதை இலகுவில் தீர்த்துக்கொள்ளலாம். தமிழ்மொழி ஆக்கியோனின் மூலவரலாறும் அதில் உண்டாயிருக்கும் நூல்களின் காலநிர்ணயமும், சரியாகக் கணிப்பதில் பலனில்லை. தமிழ்மொழி பேசுகிறவர்களோ அனேகர், அதில் எழுதப்பட்டிருக்கும் ஏடுகளோ அனந்தம், எழுதிக்கொண்டிருக்கும் ஏடுகளோ சொல்லிமுடியாது. அன்னியபாஷைகளையுடைய ஊர்களுக்கு குடிஏறின தமிழர்கள்பலதலைமுறையானாலும் தமிழ்மொழியே பேசுகிறார்கள். இப்படியெல்லாமிருக்க தமிழ்மொழி எப்படி எங்கே போய்விடும்.

கைவல்யம்.

கலிங்கத்துபரணியில்தான் பழய தமிழன் மறைந்துகிடக்கிறான் என்று கருதுகிறார்கள். தொல்காப்பியத்தில் பழய தமிழ்வழக்கம் பதிந்துகிடக்கிறதென்று தோள்தட்டுகிறார்கள். பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில்தான், தமிழ்த்தாய்மார்களின்வீரம் விளங்குகிறதென்கிறார்கள். கம்பஇராமாயணத்தில் கவியின்பம் கரைபுரண்டோடுகிறதென்கிறார்கள். தேவாரம் திருவாய் மொழியில்பக்திதேனொழுகுகிறதென்கிறார்கள். தமிழ் தனிமொழி என்றும், சிவபெருமான் அளித்த இரண்டு மொழிகளில் ஒன்றென்றும் சொல்லுகிறார்கள். இவ்வளவும் சொல்லுகிறவர்கள் பண்டிதர்கள்தான். குறைபாடிருப்பதாகவும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் சொல்லுகிறவர்களும் பண்டிதர்கள்தான். இவ்வளவு பெருமையுடைய மொழியில் என்ன குறைபாடிருக்கும்? இருந்தால் அது என்ன? எப்படிவந்தது, வருவானேன்? வந்ததற்குக் காரணங்களென்ன? என்பதை ஆலோசித்துப்பார்த்து அதை சனசமூகத்திற்கு சொல்லும் பண்டிதத்திறமைதான் அழகுடையதாகும், அவசியமுமாகும்.

கலிங்கத்துபரணியில் கலிங்கதேசத்தைக் கண்டுபிடிப்பதோடுகூடத் தொல்காப்பிய ஆராய்ச்சியில்பண்டைத்தமிழரின்கொட்டு கூத்து, வாத்தியம், கும்மியும், மண்ணும் மணலும், மலையும், நிர்ணயம் பண்ணுவதோடுகூட, விஜயநகரமென்னும்பிரபலப்பட்ட தெலுங்கு இராஜ்யத்தைத்தாண்டி கங்கைகரையிலிருந்த தெலுங்கு இராஜ்யத்தைச் சோழன் ஜெயித்தாலும், தெலுங்கரும் மராட்டியரும் தமிழ் இராஜ்யத்தை ஜெயிர்சதற்கு ஒரு தமிழ் நூல் ஆராய்ச்சியும் வேண்டியதில்லை. அவை பிரத்தியட்சமானவைகள். தமிழ் இராஜ்யம் வீழ்ச்சி அடைந்ததற்குக் காரணம் என்னவென்பதையும் சேர்த்துஆராய்ச்சி பண்ணித் தெரிந்து தமிழர்களிடமுள்ள அக்குறைபாடுகளை நீக்கினல் அது பண்டிதர்களுக்கு ஆபரணமாகும்.

ஒரு மொழியானது சிறப்படைந்து மேன்மையாய் விளங்கவேண்டுமானல் அந்தமொழி கடவுளாலும், இராஜாவாலும் மதிக்கப்பட்டு அவர்களின் விவகாரங்கள் அதிலடங்கி, அந்தமொழி அவர்களுக்கும், அர்த்தமாகி அவர்களும் அங்கீகரிக்கவேண்டும். அதுவுமல்லாமல், புதிது புதிதாய் நடந்துவரும், மாறுதலின் இயற்கைஎன்னும்காலமானது தன்னியற்கைக் குணத்தால் உலகத்தைப் புதிது புதிதாக மாற்றிக்கொண்டே வருவதற்கு இசைந்தாற்போல, மனிதன் அறிவு விருத்தியாவதாகும். உலகவிவகாரங்களை நடத்திவருவதற்குத் தொழில் முறையானசாஸ்திரங்களையுடைத்தாயிருக்க வேண்டும். அவ்விதம் தமிழ்மொழியில்லை. ஏன் இல்லை? எதனல் இல்லாமல் போயிற்று. இருக்க வேண்டியதற்கு இனி மார்க்கமென்ன? அதற்காகத்தமிழ் அபிமானிகளும், பண்டிதர்களும்செய்யவேண்டியகாரியமென்ன, என்பவைகளை ஆலோசித்துப் பார்த்து உண்மை உணர்ந்து, சமூகங்களுக்குச் சொல்லுவது ஆராய்ச்சியின் பலனுமாகும். முதலாவது நமதுதெய்வங்களுக்கே தமிழ்கூடாது என்றும், தமிழ் மொழியில் தெய்வங்களுக்குச் சொல்லப்படும் மந்திரமென்னும் விண்ணப்பங்கள் பல

2-ம் பக்கம் பார்க்க.

தமிழ் விருத்தியடையவழி!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னளிக்காதென்றும், கற்பித்து அனுபோகப்படுத்தியும்விடப்பட்டிருக்கிறது. இதை பலகாலமாகத் தமிழ்பண்டிதர்களும் ஒத்துக்கொண்டு அதற்கே உதவியும்செய்து வந்திருக்கிறார்கள். இன்றும் அதைத்தான் செய்கிறார்கள். நமது தெய்வங்களான பிர்மா, விஷ்ணு, சிவன், விநாயகர், சுப்பிரமணியர், பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, வள்ளி தெய்வயானை, கங்கை, யமுனை, காவேரி, முப்பத்துமுக்கோடி தேவர்கள், பிதிர்தேவதை, நவக்கிரகம், பத்து அவதாரம், அனுமார், கருடன், பலஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள், இன்னும்பல தெய்வங்கள் இத்தனைக்கும் தமிழ் மொழி தெரியாது. தமிழை ஏற்றுக்கொள்ளுவதுமில்லை. தமிழன் தொட்டாலே தீட்டுப்பட்டுவிடுகிறது. குன்றுகள் தோறும் விளையாடும், பண்டைத் தமிழ்த் தெய்வமென்று சொல்லப்படும் முருகன் கூடத் தமிழை மறந்துவிட்டது. இப்பொழுது வடமொழியில் மந்திரம்சொன்னால் தான் அவருக்கு அர்த்தமாகுமாம். இப்பொழுது அப்படியேநடந்தும் வருகிறது.

"அங்கமோராறும், அருமறை நான்கும், அருள்செய்து பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற் பொலிவித்து, திங்களும், பாம்பும் திகழ்சடையுமுடையவன் மகன் திருப்பரங்குன்றத்தில் விளங்குகிறார் என்று நமது சைவ சமய ஆசாரியார் சொன்னாரேஅல்லாமல் தொல்காப்பியமும், பத்துப்பாட்டும்எட்டுதொகையும், சிவஞானபோதமும், சிவஞானசித்தியும் அருள்செய்தாரென்று சொல்லவில்லையே. வேதம் நான்கும் அதன் அங்கம் ஆறும் தமிழல்லவே, வடமொழியல்லவோ! பழய சிவனையும் பூர்வீகமுருகனையும் தமிழ் விருந்துமாற்றி மறக்டித்துத் தமிழைப் பாடுங்கள், ஆடுங்கள், பாராயணம் பண்ணுங்கள், ஆனால் பரமன் பாதத்தில் அர்ச்சனைக்குத் தமிழ் ஆகாதென்றுதள்ளும் ஏற்பாட்டைச்செய்தவர்கள் பார்ப்பார ஆசாரிகள் என்றுசொன்னால்சைவப்பண்டிதர்களில் சிலர் மீசையைத்தொட்டுப் பார்த்துக் கோபிக்கிறார்கள். நாம் செய்யும் தெய்வபூசையும் வழிபாடும் ஏன் தமிழாய்இருக்கப்படாது; அவை ஏன் நீக்கப்பட்டு அங்கீகரிக்காமல்போய்விட்டது. இதைக்கவனித்துப்பாருங்கள். நமது கடவுளுக்குத் தமிழ் அர்த்தமாகி, அங்கீகரிக்கையிலல்லவா தமிழ் மொழியின் குறைபாடு நீங்கும்.

அங்கமோராறும், அருமறை நான்கும் சிவபெருமான் அருள்செய்தாரென்று சைவசமய ஆசாரி திருஞானசம்பந்தர் சொன்னாரே, அந்தவேதத்தில் என்ன சொல்லியிருக்கிறது என்பதை தமிழர்களில் அனேகர் அறியார்கள். அந்தவேதத்தில் தமிழர்களுக்குததஸ்யுதாசன், மிலேச்சன், அசுரன், சூத்திரன், அனாரியன்எனப் பற்பல இழிவானபேர்களே வழங்கப்பட்டிருக்கிறது. ஆரியர்களுக்கோ, பூதேவர், ஸ்வயம்பூவின் சந்ததிகள், எஜமானர், பண்டிதர், பிராமணர்முதலிய உயர் பெயர்கள் வழங்கிஇருக்கின்றன. இந்த வேதத்தைத்தான் சிவபெருமான் அருளினார், அதற்குச் சாட்சிதிருஞானசம்பந்தருமாகஇருக்கிறார். சிவபெருமான் அருளினாரா, இல்லையோ அது நமக்குத்தெரியாது. அவ்வேதத்திலிருக்கிறது, அவர்சன்னதியிலும் அப்படியே இருக்கிறது. அதைநிலை நிறுத்தத்தான் திருஞானசம்பந்தரும் மற்றும்பல பார்ப்பார ஆசாரிகளும், சிவபெருமான் திருமார்பில் முப்புரிநூல் அணிந்திருப்பார் என்றுபாடித் தெய்வத்தை பார்ப்பாரசாதியாக்கி பூணூலும்போட்டு பூணூல்கலியாணமும் செய்கிறார்கள். பார்ப்பானுக்கோ தமிழ் சூத்திரமொழி, பார்ப்பார ஜாதியான நமது தெய்வங்களுக்கும் தமிழ் சூத்திரமொழி என்றாலும், இழவு, எட்டு, கருமாந்திரம், முதலிய சுடுகாட்டுத் தேவதைகளுக்கும் தமிழ்மொழி பிடிப்பதில்லையே. சுடுகாட்டுத்தெய்வத்திற்குகூடத் தமிழ் பிடிக்காமல்அர்த்தமாகாமல் தமிழ்மொழிஇருக்கையில் தமிழ் மொழியில் எத்தனைபாணியிருந்தாலும் அதை ஆராய்ச்சிபண்ணும் ஆங்கிலபட்டதாரியான தமிழ்ப்பண்டிதர்கள் அனேகர்இருந்தாலும் பயன்என்ன?

தமிழர்களின் மடாதிபதிகளைச் சைவசமயத்தோர்களெல்லாம் சிவ பெருமானுக்கு இரண்டாவதாக நினைக்கவேண்டும். அவ்விதமே மரியாதைகளும் செய்யப்படுகின்றனர். அவர்கள், ஆகமவிதி தெரிந்தவர்கள். அதன் அனுஷ்டான பூசைகளைத் தினமும் செய்கிறவர்கள். சைவசமயப்படி எல்லாத்தீட்சையும்பெற்றவர்கள். தென்தேசத்துப் பெரியசிவாலயங்களுக்குக்கர்த்தாக்கள், காரியம்நடத்துகிறவர்கள். சிவபெருமானைக் கைகூப்பி வணங்குவதைநிறுத்தி மனதிலேயே வணக்கத்தைச்சங்கற்பித்துக்கொள்ள அதிகாரம்பெற்றவர்கள் பெரும்சொத்திற்கு அதிபதிகள். தானதருமம் வழங்குகிறவர்கள். காஷாயம் உருத்திராட்சம் விதிப்படி அணிந்தவர்கள்., சன்னியாசிகள். இவர்கள் கோயிலின் உள்பிரகாரம்போய் ஒரு வில்வத்தைச் சுவாமிதலையில்போட்டுமந்திரம்சொல்ல அருகதை உடையவர்களாக இருகிறார்களா? ஏன்இல்லை? அவர்களும் சூத்திரர்கள்தான். அவர்கள் மொழியும் சூத்திரமொழிதான் என்பதல்லாமல் வேறுஎன்னகாரணம். எல்லாவற்றிலும் ஒழுக்கங்கெட்ட ஒருபார்ப்பான் கர்ப்பக்கிரகத்தினுள்போய் சுவாமிதலையில் கைவைத்துக்கள்ளும், சாக்கணவும் தின்னும் வாசனைவீசும் வாயால் எதையோ முணுமுணுக்கலாம் அது மந்திரமுமாகும், சிவபெருமான்அருளிய நான்மறையின் விதியுமாகும்.

கோவிலோ மடாதிபதிகளின் அதிகாரத்துக்குச்சொந்தம், கோவிலோசிவன் கோவில், சிவனே சைவர்களுக்குத் தெய்வம். சைவர்களோ மடாதிபதிகளுக்குச் சிஷ்யர்கள், மடாதிபதிகளோ தமிழுக்கு சைவத்திற்கு, ஆகமத்திற்கு, கோவிலுக்கு, அதன் செலவிற்குக்கர்த்தாக்களாய்த் தமிழர்களுக்கே குருவாய், சன்னியாசியாய் இருப்பவர்கள். சைவசமயத்தில் வேறுபட்ட தள்ளப்பட்ட ஒரு ஸ்மார்த்த ஒழுக்கம்கெட்ட பார்ப்பானுக்குள்ளயாத்தியதைகூட இல்லைஎன்றால், தமிழ்க்குறை எப்படிநீங்கும்? ஆராய்ச்சிப் பண்டிதர்களே! சொல்லுங்கள். உங்கள் ஆசாரிகளே இதன்நியாய விரோதத்திற்கு காரணம் என்றால் கோபிக்கிறீர்கள். வஞ்சகம் கபடம், பொய்வினயம், இரக்கமின்மைமுதலியதீக்குணங்கள் இல்லாமல் கறுத்ததெல்லாம் தண்ணீர், வெளுத்ததெல்லாம் பால் என்ற கபடமின்மை, தன்னைப்போலப் பிறரைமதித்து நம்பிக்கொள்ளல்முதலிய குணங்களை உடைய தமிழர்களை வேதம், சாஸ்திரம் பலதெய்வம், பிதிர்லோகம் என்றவிஷயத்தில் நம்பிக்கையை அதிகப்படுத்திவர்ச்சு கிரமத்தைவைத்துத் தங்களை உயர்த்திக்கொண்டு மதக்கொள்கையைக் குழப்பிக் கொடுத்துத் தங்கள் ஜாதிக்கே தானதருமம் வழங்கவேண்டுமென்பது கடவுள் கட்டளை என்றுசொல்லி அதிலிருந்து ஆலோசனையில்லாதஜனங்களைஏமாற்றிச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி தங்கள்சுயநலத்தையும் ஜாதி அபிமானத்தையும் கட்டுப்பாடாய் நிலைபெறச்செய்வதற்கு ஏற்படுத்தின கதைகளில் அகஸ்தியன் கதையும் ஒன்றென அறியாத நமது பண்டிதர்களில் பலர், இன்னும் சிவபெருமானின் கலியாணத்தில் வடகோடு தாழ்ந்து, தென்கோடு உயர்ந்து போனதைச் சரிப்படுத்தச் சிவபெருமான் அகஸ்தியருக்குத்தமிழ் உபதேசித்து தென்னாட்டுக்கு அனுப்பினார் என்பதை இன்னும் நம்பிக்கொண்டே தமிழ் ஆராய்ச்சி செய்கிறார்கள், எழுதுகிறார்கள், பிரசங்கம்செய்கிறார்கள். இவ்வித பண்டிதர்கள் முன்னும் இருந்தார்கள், இப்பொழுதும் இருக்கிறார்கள். இத்தனை பண்டிதர்கள் இருந்தும் இங்கு இருக்கும் நமது சிவபெருமானுக்கும் அவரைச்சேர்ந்த தெய்வங்களுக்கும் தமிழ்ஏன் தெரியாமல் போயிற்று என்று நினைத்துப்பார்க்கவில்லை. அவைகளுக்குதமிழ்மொழியைகற்றுக்கொடுக்கவுமில்லை. ஒன்றிரண்டு பண்டிதர்கள் அதைத்தெரிந்துசொன்னால்மற்றவில்லாதி வீரர்களான பண்டிதர்களெல்லாம் சண்டைக்குப் போவார்கள். அதைக்கண்ட பார்ப்பார்களும்அவர்களையே தூண்டிவிட்டு அந்தப் பண்டிதர்களையே துன்புறுத்துவார்கள். இதையே பண்டிதப் பெருமை என்று நினைத்துவிட்டார்கள்.

வடதேசத்து கங்கை, யமுனைமுதலிய நதிகளுக்குத்தான் தமிழ்மொழிதெரியாது

(8ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 23—4—44 ஞாயிறு

சாமான்யமா!

நந்தவனத்திலோர் ஆண்டி
அவன் நாலாறுமாதமாய்க்
குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி
அதைக்கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத்தாண்டி!!

என்றோர் பாடலைக் கேட்டிருப்பீர்கள். இதிலே குற்றம் யாரிடம் இருக்கமுடியும்? தோண்டி கிடைத்ததே என்ற களிப்படைந்த ஆண்டி, கூத்தாடியதுதானே குற்றம்! ஆற்றுநீரைக் கலக்கிச் சேறாக்குவானேன், பிறகு ஆயாசப்படுவானேன்! ஆப்பை அசைத்துவிடுவானேன், அறுபட்ட வாலை எண்ணி அழுவானேன்! கல்லைக்குத்துவானேன், கைவலிக்கிறதே, என்று பிறகு கதறுவானேன். எண்ணித் துணிக கருமம், துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு என்று பெரியோர்கள் சொன்னது எதற்காக! ஏதேதோ படித்து, எதைஎதையோஇயம்பிஇறும்பூதெய்தும் இயல்பினருக்கு, வினைக்கேற்ற விளைவே கிடைக்கும் என்பது தெரியவேண்டாமா! நாம் முன்னமே சொன்னோம், ஐயன்மீர்! வீம்புகூடாது, வீம்பின் சூளிலே, வம்பே வளரும் என்று. கேட்டனரோ, எடுபுரட்டிகள்? இந்தப்பயல்கள் சொல்லுவதா, நாம் கேட்பதா, நமது படிப்பென்ன, பட்டமென்ன, பண்பு எத்துணை, படாடோபம் எத்திறத்தது, என்று எண்ணினர், எமக்கு நிகர் இங்கொருவருமில்லை என்று எக்காளமிட்டனர், பின்னர் ஏங்கினர். குறைமதியால் வரும் தொல்லை பலப்பல. மதியிருந்தும் அதனைச்செலுத்தும் மார்க்கம் அறிவது தனியானதோர் திறமை, அதனை அறியாதார், எதற்கும் உதவாதார் என்போம்.

கோசலநாட்டு வளமுரைக்கப்போந்த கம்பர்,

வண்மை இல்லையோர்
வறுமை இன்மையால்.
திண்மை இல்லை நேர்
செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்
உரை இல்லாமையால்
வெண்மை இல்லை பல்
கேள்வி மேவலரால்

என்று கூறினர். உனக்கென்னதெரியும் கம்பர் கவிதை, தெரியுமெனினும், இது கலாரசிகர் T.K. சிதம்பரநாதரால் பழுது பார்க்கப்பட்ட பாவா, என்று கேட்காதீர் தோழர்களே, இதனைச் சென்னையிலே நடந்த கம்பர் மாநாட்டிலே, தலைமைபூண்ட திருவாளர் பெரும் பேராசிரியர் பண்டிதமணி, மகிபாலன்பட்டிக் கதிரேசர், தமது உரையிலே உரைக்க இருந்தார், உரைக்க இயலவில்லை, பத்திரிகை பல பின்னர் பிரசுரித்தன. எனவே பாடல், ஒரு பண்டித மணியால் மேற்கோளாகக்காட்டப்பட்டது, பாமரனால் அல்ல! வறுமையில்லை, எனவே கொடை இல்லை, பகைவர் இல்லை ஆகவே வீரம் இல்லை, என்ற பொருள் படக் கம்பர் கூறினரே அதேபோல, நாமொன்று நவில்வோம்,

அமைதி இல்லை ஆங்கு
ஆர்வம் இன்மையால்
இனிமை இல்லை ஈர்க்கும்
இயல்பு இன்மையால்
பொறுமை இல்லை
பெருமையாளர் இன்மையால்
பண்பு இல்லை
அப்பழக்க மின்மையால்

ஆம்! சொற்பொழிவின் பயனோ முறையோ ஆர்வத்தை ஊட்டுவதாக இல்லை, எனவே, அக்கூட்டத்திலே அமைதி நிலவவில்லை, அமளி குறையவில்லை, பேச்சிலே இனிமை இல்லை, காரணம் எதிர்ப்பாளரையும், தன்வயப்படுத்தக்கூடிய இயல்பு பேசினோரிடமின்மையால். சபையைப் பெருமைப்படுத்திடும் பெருங்குணம் இல்லாததால் அங்கு, மக்களிடை பொறுமை இல்லாதுபோயிற்று. பண்பிலே பழக்கமில்லாதார் நடத்திய நிகழ்ச்சியிலே பண்பு காணப்பட முடியாது போயிற்று. சென்னை கோகலே மண்டபத்திலே 16ந் தேதிமாலை நடைபெற்ற கம்பர்மாநாடு, குழப்பத்திலே மூழ்கியதற்குக் காரணம் நாம் மேலே குறிப்பிட்டதுதான். கவிதை முறையிலே குறையிருக்கும், நாம் கவியல்ல, ஆனால் காரணவிளக்கத்திலேகுறையிருக்காது, நாம் ஆரஅமர யோசித்து இதனை உரைத்திருப்பதால்.

சொற்போரும் மற்போரும் வேறுவேறுதான், என்றபோதிலும், இருசெயலுக்கும், நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் வேண்டும், நிலைமை உணர்வும் வலிமை அளவறிதலும் இருந்தாகவேண்டும், களத்தின் அமைப்புக் கேற்பவேபோரும் இருக்கமுடியும், கருத்தின் தன்மைக்கேற்பவே வெற்றிகிடைத்திட முடியும். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அன்று அமளி நடந்ததால் இதனை மறந்தனர் போலும். நான்சொற்போருக்குத்தயாரேயன்றிமற்போர்புரியும் பருவம்கடந்துவிட்டேன், என்று உரைத்தாராம்! உண்மைதான்! ஆனால் பருவம், மற்போர் விஷயமாகமட்டுமே கவனிக்கப்படவேண்டும் என்று கருதுவது சரியல்ல, சொற்போருக்குந்தான் அது பொருந்தும். நாம்கதிரேசர் வயோதிகர் எனவே, சொற்போருக்குப் பருவம் இல்லை என்று கூறுவதாகக்கருதவேண்டாம், முதுமை வளரவளர மற்ற அங்கங்களின் தொழில்திறம் குறையும், வாயுரைத்திறம் வளரும் என்பதை நாமறிவோம், எனவே நாம் குறிப்பிடுவது, தனிப்பட்ட ஒருவரின் பருவத்தை அல்ல; காலம் என்ற கருத்திலே கூறுகிறோம், புராணத்தின் சார்பாக நின்று சமரிட, சொற்போராயினுஞ் சரியே, மற்போர் ஆயினும் சரியே, இது பருவமல்ல, காலம் மாறிவிட்டது. இது கழுமரம் நாட்டக்கூடிய காலமுமல்ல, கடவுள் அடியெடுத்துக்கொடுக்கக்கூடிய காலமுமல்ல, ஏடு எதிர்நோக்கி ஓடும் காலமுமல்ல, இதுபகுத்தறிவுக்காலம்! பண்டிதமணியார், அன்றைய கலவரத்தைக் கண்டு, மற்போர் புரியும் பருவம் தமக்கு இல்லை என்பதை உணர்ந்து. உரைத்தாரே, அதே போலவே, அவர் காலவேகத்தையும் மக்கள் கொண்டுள்ள பகுத்தறிவு ஆர்வத்தையும், ஏன், எதற்கு என்று கேட்கும் மனப்பான்மை எங்கும் பரவி இருத்தலையும், காண்பாரானால், மற்போருக்குமட்டுமல்ல புராணத்துக்கு ஆதரவு தேட, பருவம்கடந்தேவிட்டது என்பதை உணருவார். இதனை உணர, இன்னமும் காலம் கடந்துவிடவில்லை!

ஆரியர்-திராவிடர் உணர்ச்சி ஊறெங்கும் வலுவடைந்துவிட்டதை, இந்நாடு இன்று ஆரியத்தின் வேட்டைக்காடாகியதாலேயே, திராவிடரின் வாழ்வு சுடுகாடாகிவிட்டது என்ற எண்ணம்பரவிவிட்டதை, எந்தவிலைகொடுத்தேனும் இனவிடுதலையைப்பெற்றே தீரவேண்டும் என்று உள்ளத்திலே உறுதி கொண்டிருப்பதை, வேங்கைக்காட்டிலே நரிஆட்சி புரிவதா, என்ற முழக்கம் கிளம்பிவிட்டதை, கலைச்செல்வம், காவியரசம், இலக்கியச்சுவை என்ற இன்னோரன்ன மேற்பூச்சுகளிலே ஆரியமெனும் நஞ்சு தமிழரின் நெஞ்சகத்திலே பாய்ச்சப்படுவதைத் தெரிந்துகொண்ட தமிழர், கலைப்புரட்சி செய்தாகவேண்டுமென்று கூறுவதை, வாலிப உலகுஇதற்கான ஆதரவுதருவதை இதனைச் சாதிப்பதற்கு வேண்டிய வலிமை வளர்வதை, இதுவளர்வதை, ஆரியவர்க்கம் உணர்ந்திருப்பதை, அந்த உணர்வு, சில சமயம் ஓலமாகவும் வேறு சில சமயம் கலகமாகவும் நடமாடுவதை, நமது பண்டிதமணிகள் உணர்ந்திருப்பின் கம்ப இராமாயணத்தைக் கண்டிக்க ஒரு கூட்டம் இருப்பதா, அதைக்கண்டு நாம் வாளாயிருப்பதா, ஏடுஎடுத்து வீசுவோம், புலமை எனும் பாணம்விட்டு அவர்களைத் துளைப்போம், ஆவேசமொழிபேசிஅழிப்போம், என்று வீம்புகொள்ளாமல், நிலையை அறிந்து நடக்கும் யூகம்பெற்று, கலையைக் காலத்தின் பணியாளாக்கும் வீரர்களாகி இருக்கமுடியும்! அங்ஙனம், அவர்கள் செய்திருப்பின், நமது அகம்மகிழும்,

4-ம் பக்கம் பார்க்க.

சாமான்யமா!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது அகத்தின் நிலைபற்றி அவ்வளவு பெரிய மனிதர்களுக்கு அக்கரை இருக்க முடியாது, அதைக்கூட அவர்கள்பொருட்படுத்தத்தேவையில்லை, புறத்திலே காட்சி அன்று கோகலே மண்டபத்திலே இருந்ததுபோல இருந்திராது. புலமையை இனவிடுதலைக்குப் பயன்படுத்திய பெரியோரே, வருக! கலையைத் தமிழர் நிலையை உயர்த்தும் கருவியாகும்படி திருத்தியமைத்த கதிரேசரே வாழ்க! ஆரியப் புரட்டை அழிக்க அறிவைப்படைக்கலமாகக்கொண்ட அருந்தலைவர்காள் வருக, வருக!! என்றவாழ்த்தொலி, அந்தமண்டபத்திலிருந்து கிளம்பி அக்கிரகாரம்வரை முட்டி இருக்கும், கலகம்பட்டியிலிட்ட காளை என அடங்கி இருக்கும், களிப்புமிதமாக இருந்திருக்கும். ஆனால் நடந்தது என்ன! இரைச்சல், இடர், இடி, கலகம் குழப்பம், கைகலப்பு சலசலப்பு, பதைப்பு துடிப்பு. சொற்பொழிவு கால அழிவாயிற்று. காலத்தை உணராக்குறையின் விளைவு இது, காரணம் வேறொன்றுமில்லை.

“ஐயோ! கண்ணு! கமலம்! கமலம்! ஐயா, என்குழந்தை கமலத்தைக் கண்டீர்களா! ஐந்துவயதுக்குழந்தை, அழகாக இருக்கும், பார்த்தீர்களா ஐயா!” என்று கதறிக்கேட்கிறாள் ஒரு மாது. இல்லையே, என்று பதில் மூலைக்கு மூலை கிளம்புகிறது. இடையே ஒரு பேச்சு எழுகிறது; தேரும் திருவிழாவும் திருடருக்கு விருந்தல்லவா, இந்தத் தெளிவில்லாத் தையல், அணி பலபூட்டி அழைத்துவரலாமோ குழந்தையை? எவனோ கள்ளன், நகையைக்களவிட எண்ணிக் குழந்தையைக் களவாடிச் சென்றுவிட்டான், நகை போனால்போகட்டும், குழந்தையைஅவன் உயிரோடு விடுவானோ, கழுத்தை முறித்துக் கொன்றுவிடுகிறானோ, என்னமோ யார் கண்டார்கள்? என்று சிலர் கூறுகின்றனர். சீராட்டிப் பாராட்டிச், சிரித்திடும் வாய்க்குமுத்தம்ஈந்து, மழலை கேட்டு மகிழ்ந்து குறுநடைகண்டு களித்திடும் பெற்றோர், தமது பாலருக்கு நகைகளைப் பூட்டி நடுவீதியிலே பெருங்கூட்டத்திடையே அழைத்துச்சென்றால், கள்ளன் கருப்பட்டியைக்காட்டிக் குழந்தையைத் தாயிடமிருந்துபிரித்துத் தனியிடம் எடுத்துச்சென்று அணிகளை அகற்றிக்கொண்டு, பேசாதிருந்தால் உயிருடன் உலவவிடுவதும், அழத்தொடங்கினால் குழந்தையைப் பிணமாக்குவதும், உண்டு. ஆரியம், வலிமை, வளம், வாய்மை தூய்மை, வீரம் ஈரம், கொடை பெருங்குணம் முதலிய அணிபலபூண்ட நமது அருந்தமிழர்களையுங்கூடக், கலை என்ற கருப்பட்டியைக்காட்டித், தன்மானத் தோழரிடமிருந்துபிரித்துஅழைத்துச்சென்று, அணிகளை அகற்றிவிடுகிறது, பேச்சு மூச்சும் பெரும்பிழை என்றுகருதும் தடித்த தோலரை, உலவவிட்டுவைக்கிறது, சூதறிந்து ஏன் இச்செயல் என்றுகேட்கக் குரலெடுத்தாலோ, அழித்தேவிடுகிறது, அதாவது செல்வாக்கு அற்றவர்களாக்கிவிடுகிறது. அந்தநாள் முதல் இந்தநாள் வரை ஆரியத்தின் நடவடிக்கைஇருந்த விதமறிந்தவர், நாம் கூறுவதைத்தெரிந்துகொள்வர். நமது கலாரசிகர்கள் என்போரின்கதி, அணிபூண்ட சிறுகுழந்தை, கள்ளன் கருப்பட்டிக்கு ஆசைப்பட்டு 'அவன்பின்சென்று, அணியிழக்கும் நிலைபோலவே இருக்கிறது.

“நம்மமகிபாலன்பட்டி செட்டியார் இருக்கார்பாருங்கோ, அபாரமான ஞானம் அவருக்கு! ஆச்சாரஅனுஷ்டானுதிகளிலே அவருக்கு அலாதியான பிரியம்! ஜாதித்துவேஷமென்பது அவரிடம் லவலேசமும்கிடையாது. மகாமகோபாத்யாயபட்டமன்னோ அவருக்குக் கிடைச்சிருக்கு, நம்ம, உ. வே. சாமிநாத ஐயரவாளுக்குக்கிடைச்சமாதிரி” என்று வெல்லப்பேச்சுப்பேசி ஆரியம்,இதுவரை கணக்கற்ற கதிரேசர்களைக் கவிழ்த்திருக்கிறது! எனவேதான், புதுஉலகம் காண விழையும் தோழர்கள், ஆரியமெனும் பூவையின் புன்சிரிப்பு ஒருபொறி, அவளது ஆலிங்கனம் அழிவுக்குவழி, அந்தச் சல்லாபம் சாவுக்கிடங்குக்கு இழுத்துச் செல்லும், வேண்டாம் அந்தஉறவு, எட்டி நில்லும், ஆபத்து, எச்சரிக்கைஎன்று, கூறிவந்திருக்கின்றனர். கேளாக்காதராக இருந்தால், தீராத்தொல்லைதானேவரும்! இதற்கென்ன செய்யமுடியும்!

சென்னையிலே, பலமுறை காப்பிய மாநாடுகள் நடந்துள்ளன, கம்பர்மாநாட்டிற்குத் தலைமைவகித்த பண்டிதமணியாரே, அத்தகைய மாநாட்டுக்குத் தலைமைபூண்டுள்ளார், புலவர் பலர் பேசியுள்ளனர். கலித்தொகை மாநாடு, குறுந்தொகைமாநாடு, புறநானூறுமாநாடு அகநானூறுமாநாடு, என்று பற்பல மாநாடுகள் பழயஏடுகளிலே உள்ளசுவையைப் பயனுடைத்துஎன்று மக்கட்கு விளக்கக் கூட்டப்பட்டன. ஒன்றேனும் குழப்பத்திலே இடறிவிழவில்லை, “எதிர்ப்பாளர்கள்” இருந்ததில்லை. மகிபாலன் பட்டியாரின் மணிமொழி, மனமகிழ்ச்சிக்கு ஒருவழி என்று கருதியவர் பலர். செவி உணர்வுஇல்லாமாக்கள் என்றும், கலை அறிவில்லாக் கயவரென்றும், கற்பனைக் கரும்பை அறியாக்காலிகள் என்றும், கடுமொழி பலவற்றுக்கு ஆளானசுயமரியாதைக்காரர்கள். மேற்படி மாநாடுகளிலே கலாம்விளைவித்தனர் என்றோ, அக்கூட்டத்தினருக்குக் கதிரேசர்மீது கோபம் இருந்தது என்றோ, எவரும் கூறிடமுடியாது. கம்பர் மாநாடுதான் குழப்பத்திலே முடிந்தது! அதிலே கதிரேசர் தலைமைதாங்கினதாலுமல்ல, கம்பஇராமாயணம் பழயகாப்பியம் என்பதற்காகவுமல்ல, அக்குழப்பம்!! வந்தேமாதரகீதம், திரேதாயுகத்தது என்பதற்காக அல்ல, முஸ்லீம்கள் அதனை எதிர்ப்பது. இக்காலத்திலேதோன்றிய கீதந்தான், என்றாலும், முஸ்லீம் இனத்தை அது இழிவுசெய்யும் இசையாக அமைந்திருக்கிறது என்பதற்காகவே, அதற்குஎதிர்ப்புக் கிளம்பிற்று. அதுபோலவே, கதிரேசர் மீது கோபங்கொண்டதாலோ பழயகாப்பியத்தின்மீது ஆத்திரம் வைத்ததாலோ கம்பர் மாநாட்டிலே கலவரம்நேரிட்டது என்று கூறுவது பொருந்தாது. கம்பஇராமாயணம், திராவிட இனத்தை இழித்துரைக்கவும் ஆரியருக்கு அடிமைப்படுத்தவும் ஒருகருவியாக அமைந்திருக்கிறது. திராவிட இனம் எழுச்சிபெற வேண்டுமானால், இத்தகைய ஏடுகளைக் கண்டித்தாகவேண்டும், என்ற எண்ணம் வலுத்திருப்பதே, அன்றையகலவரத்திற்குக்காரணம். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயில் ஆண்டி என்பார்களே, அதைப்போல, மாநாட்டுக்கு வந்திருந்த மக்களின்எதிர்ப்பு, சு. ம.க்களின் காலித்தனம் என்றும், சு. ம.காடிகளின் அட்டகாசம் என்றும் ஆரியஏடுகளில் எழுதப்பட்டதோடு, இந்தக் குழப்பத்திற்குக் காரணமே. சு. ம.க்கள்தான் என்று, கூறப்படுகிறது. பலமுறை பாதகரின் பழியுரைகேட்டுப் பழக்கப்பட்ட தன்மான இயக்கத்தினருக்கு, இது புதிதல்ல, தாங்கிக்கொள்ளமுடியாததுமல்ல, மதியை ஆரியத்துக்கு அடகுவைத்துவிட்டவர்களின் பேச்சுக்கு மதிப்புத் தருவதோ அதனைக்கேட்டு மனத்தாங்கல் கொள்வதோ சு. ம.க்களிடம் ஏற்படப் போவதில்லை, அதுமட்டுமல்ல, ஆரியத்தின் அடிவருடி அறிவிழந்தவர்கள்மீது கோபங்கூடக்கிடையாது, சு. ம.க்களுக்கு பரிதாபந்தான். கவிதைகளைக்கேட்டமாத்திரத்திலேகசிந்து கண்ணீர்மல்கும் பக்த கோடிகளும், இந்தப் புளுகு கந்தபுராணத்திலும் இல்லையே என்ற பழமொழிபரவிய பிறகுங்கூட, கந்தலீலா கதைகேட்டுக், கார்த்திகேயா! கீர்த்திவேலா! முருகா, பழனியாண்டவா! என்று பஜிக்கும்தாசர்களும், ஆண்டவனைப்பற்றிய கதையிலே அறிவுக்குப் பொருத்தமாஇல்லையா என்ற ஆராய்ச்சியேசெய்யக்கூடாது, அங்ஙனம் ஆராய்வதே நாத்தீகம் என்று நம்பும் நடுங்கிகளும், பெருவாரியாகக் கம்பர் மாநாட்டிலே, அன்று இருந்திருப்பார்களானால், மாநாடு மங்களகரமாக இரகுபதிராகவ இராஜாராம் எனும் கீதத்துடன் முடிந்திருக்கும்! ஆனால் இன்று, அறிவுபரவிவிட்டதே, எங்கிருந்து, எதையும் நம்பும் ஏமாளிக்கூட்டம்கிடைக்கும், கோமாளிக் கதையைக்கேட்டுக்களிக்க! அன்றைய மாநாட்டிலே, வந்திருந்த பொதுமக்களில் பெரும்பான்மையோருக்கும், கம்பஇராமாயணத்திற்கு ஒரு மாநாடு கூட்டியதும் அதனை மாநாட்டு நிர்வாகிகள்நடத்திய முறையும், அங்கு பேசினோரின்பேச்சின் தன்மையும், சிலபெரிய மனிதர்களின் செயலும், ஆத்திரத்தைக் கிளப்

சாமான்யமா!

6-ம் பக்கத்தொடர்ச்சி.

முடியவில்லை. என்ன ஆச்சரியம்!! மேடை மீது இருந்த அத்தனைபேரும் அவ்வளவு, கையாலாகாதவர்களா? என்று கேட்கத்தானே தோன்றும், யோசியுங்கள். அது தான் போகட்டும். ஒரு இளைஞன் இவ்வளவு செய்ததைக் கூட்டம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுவிடுமா? தினமணி நிருபர் கூறியதுபோல கம்ப பக்தியிலே கட்டுண்டு கிடந்தனர் என்று கருதிவிடாதீர்கள். பாரததேவி நிருபர் எழுதுகிறார் இச்சம்பவத்துக்குப் பிறகு "அதிகமானவர்கள் ஆரிய அடிமையே பதில் சொல், என்று கூச்சலிட்டனர்" என்று. இதன் பொருளென்ன? மேடைமீது ஏறி அமர்க்களம் செய்தவனை, ஆதரிக்கச் சபைதயாராக இருந்தது என்பது தான். "பல பெரியார்கள் முன்வந்துவணக்கத்துடன் அமைதியாய் இருக்கும்படி வேண்டிக் கொண்டும் கூச்சல் நிற்கவில்லை" என்று எழுதுகிறார். இதிலிருந்தாவது தெரியவில்லையா, கம்பர்மாநாட்டில்சிலவம்பர்கலகம் செய்யவரவில்லை, யாரோ சிலவம்பர்கள் கம்பர் விழாவின் பெயரால் ஆரியத்துக்குக்கட்டியங் கூறுகிறார்கள் என்று, ஆத்திரங்கொண்ட மக்கள், அங்கு பெருவாரியாக இருந்தார்கள் என்பதை!

பிறகு தோழர் T. P. மீனாட்சிசுந்தரனார் பேசினாராம், "கூச்சல் இன்னும் வலுத்தது" என்று எழுதுகிறார் நிருபர். "பலர் நின்று கொண்டனர்" என்றும் எழுதுகிறார், இதற்குத்தான் "அமைதியான" கூட்டம் என்று பெயர்!!

ஒலிபரப்புக்கருவி முதலியவைகளைக் கீழே தள்ளினவன் மேடைமீது உட்கார்ந்தான். பக்கத்திலிருந்தவர்களைப் போருக்கிழுத்தான். ஆத்திரம் பொங்கியது, அங்கிருந்தவர்களுக்கு, பளார் என்று கன்னத்திலும் அறைகள் விழுந்தன, மேடைமீது இருந்தவர்கள் எல்லோரும் எழுந்துவிட்டனர்.

இடதுபுறம் சற்று தூரத்தில் சிலருக்கிடையே மல்யுத்தம் சிலவினாடிகள் நடந்தது. சப் இன்ஸ்பெக்டர் அதட்டினார், அவர்கள் மசியவில்லை, கூச்சலும் அடங்கவில்லை. பிறகு ஸ்ரீ சேதுப்பிள்ளை பேசும்போது, சப்இன்ஸ்பெக்டர்பயமுறுத்தலாகவே அதட்டினார். 'கூட்டத்தினிடையே கலவரம் நிற்கவில்லை' இவ்வளவு எழுதிவிட்டு, பாரததேவி, "மகாநாட்டை விமரிசையாக முடித்த கம்பர் திருவிழா கழகத்தாரைப் பாராட்டுகிறோம்" என்று கூறுகிறது! போலீஸ் பந்தோபஸ்துடன் தலைவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார் என்றே, பாரததேவியும் எழுதியிருக்கிறது. கம்ப பக்தர்கள்கூடி, கலாட்டாவைப் பொருட்படுத்தாமல், அமைதியாகவும், விமரிசையாகவும் நடத்திய மாநாடு தோழர்களே இது!

மாநாட்டிலே ஆரியர் ஒழிகஎன்று இடையிடையே விஷமிகள் கூச்சலிட்டனர். ஒருவர் மேடைமீதேறி தலைவர் ஸ்ரீ கதிரேசன் செட்டியாரை அடிக்க முயன்றார். ஆனால், மேடைமீதிருந்தவர்கள் இச்சம்பவம் நிகழாமல் தடுத்தனர். கடைசியாகக்கூட்டம் அமைதியாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது.

தலைவர் நின்றுக்கொண்டுபேசமுடியாமலிருந்ததால் முகவுரையை முடித்ததும் அவர் உட்கார்ந்துக்கொண்டு பேசஆரம்பித்தார். ஆரியஅடிமை கதிரேசா பதில் சொல் இல்லையேல் கீழேஇறங்கு என்ற கூச்சல் ஒரு மூலையிலிருந்து கிளம்பியது. இக்கூச்சல் வரவரப்பெருத்தது. ஆரிய அடிமை ஒழிக கதிரேசன் ஒழிக என்ற கோஷத்தைப் பலமாகச்செய்துக் கொண்டு ஒரு சிறுபான்மையோர் குழப்பம்செய்ய ஆரம்பித்தனர்.

இந்தக் கட்டத்தில் சாந்தியை நிலை நாட்ட T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை சிலவார்த்தைகள்சொல்ல ஆரம்பித்தார் ஆனால் விஷமிகளின் அட்டகாசம் அதிகமாயிற்று. ஒரு இளைஞன் திடீரென மேடை மீதேறிஆவேசம் வந்தவன்போல் கூத்தாடினார் மேடைமீதிலிருந்த ஒலிபரப்புக்கருவிகள், கண்ணாடிடம்ளர்கள், புஸ்தகங்கள் முதலியவற்றைக் கீழே தள்ளினார், நாற்காலிகளை எடுத்து வீசினார். தலைவர் முன்னிருந்தமேஜையையும் அதன் மீதிருந்த சாமான்களையும் கீழே தள்ளிவிட்டுத் தலைவரை அவர் அடிக்கவும் முயன்றார் உடனே மேடை மீதிருந்தவர்கள் அந்த இளைஞரைப் பிடித்துத் தடுத்தனர் அவர் எல்லோரையும் திமிறிக் கொண்டு மேடையைவிட்டுக் கீழேஇறங்கினான் இந்தக் கலாட்டாவின் பயனாக இருமைக்குகள் ஒரு டிரான்ஸ்மிட்டர் முதலியன ஒடிந்தன. முன்னால் வீற்றிருந்த பத்திரிகா நிருபர்களின் தலையின்மேல் பழமாரி, புஸ்தகமாரி, புஷ்பமாரி பொழிந்தன.

T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை எத்துணைகலாட்டா ஏற்பட்டபோதிலும் திட்டப்படி இன்றைய கூட்டத்தைநடத்தியே தீருவேன் என்று பிரதிக்ஞை செய்துகொண்டு தலைவரின் உரையை தாம் வாசிக்கஆரம்பித்தார். குழப்பம் நிற்கவில்லை. பிறகு ஸ்ரீ. சேதுப்பிள்ளை ஒருபுறம் கூச்சல்நடக்கட்டும் உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை என்றார் பாரதியார். யார் என்னசெய்தபோதிலும் எனக்கு அச்சமில்லை என்றார் இந்தக் கட்டத்தில் கூச்சல்வலுத்தது. சேதுப்பிள்ளை சிறிது உட்கார்ந்துவிட்டு மீண்டும் எழுந்து ஒருவரையும் இலட்சியஞ்செய்யாமல் பேசினார். வடநாட்டைத் தமிழ் நாடாக்கண்டான் கம்பன் என்றதும் குழப்பம் அதிகம் ஏற்பட்டது. மேடைமீது இரண்டு இளைஞர்கள் எல்லோரையும் இடித்துத் தள்ளிக்கொண்டு ஏறினர். போலீசார் வந்து அவர்களை அமர்த்தி மேடைமீது உட்காரச்செய்தனர்.

தலைவரை அடிக்கப்போன வாலிபர், உட்கார்ந்த சிலநிமிஷங்களுக்குள் மேடை மீதிருந்த சிலருக்கும்அவருக்கும்இடையே வார்த்தைகள் தடித்தன. பக்கத்திலிருந்த ஒருவரை அவர் சண்டைக்கு இழுத்தார். பக்கத்திலிருந்தவருக்கு ஆத்திரம் எழுந்தது. உடனே பளார் என்று கன்னத்தில் அறையும் சத்தம்கேட்டது. மேடைமீதிருந்தவர்கள் குழப்பத்துடன் எழுந்திருந்தனர் மேடையில் ஏறிய அவ்விருவரும் கீழே இறக்கப்பட்டனர். இதே சமயத்தில் கூட்டத்தின் மற்றோர்புறத்தில் ஒருவருக்கொருவர் கைகலந்தனர். குஸ்திநடந்தது. விளைவுதெரியவில்லை" இது, சுதேசமித்திரனில் காணப்படுவது.

இதைக்கூர்ந்து கவனிப்போருக்கு ஒரு சூட்சமம் தெரியவரும். சொற்போருக்கு நான் தயார் என்று கதிரேசர் கூறியபோதும், மேடைமீது ஏறிய இளைஞரை மேடைமீது இருந்தவர்கள் பிடித்தபோதும், T. P. மீனாட்சிசுந்தரர் தமது கெம்பீரமான குரலைக்காட்டியபோதும், ஸ்ரீ R. P. சேதுப்பிள்ளை, நான்எதற்கும் அஞ்சமாட்டேன், என்று கூறியபோதும், குழப்பம், கலகம், கூச்சல் அதிகரித்திருக்கிறது. ஓரளவு தெளிவு உள்ளவர்களும் தெரிந்துகொள்ளலாம், குழப்பவாடை அடிக்கும் கூட்டத்திலே, சொற்பொழிவாளர்கள், வீராவேசத்தையும் வீம்பையும், வெத்துவேட்டையும் வலியப் போருக்கழைப்பதையும், தமக்குமிஞ்சினவர்கள் யாருமில்லை என்ற மனப்பான்மையும், தாங்கள் வீராதிவீரர்கள், எதற்கும் அஞ்சாத சிங்கங்கள். என்பதையும், எப்படியிருந்தாலும் கூட்டத்தைவெற்றிகரமாக நடத்தியே தீருவோம் என்று சவால்விடுப்பதையும் காட்டினால், எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதாகவும், ஆப்பை அசைப்பது போன்றதாகும், அமளிக்கு அச்சாரம் தருவதாகமுடியும்என்பதைஉணரலாம். மேற்படிமாநாட்டிலே, நாட்டின் இன்றையப் போக்கை உணராமலும், மாநாட்டினரின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்றநிலைமையை அறிந்து கொள்ளாதவர்களும், சபையினரின் போக்கைத் தம்வழிக்குத் திருப்பிக்கொண்டு வரக்கூடிய பேச்சுமுறை எதுவென்பதை உணரமுடியாதவர்களும், பயங்காளித்தனத்தை மறைக்கப்பிரதாபம் பேசுவது பலனளிக்காது என்ற உண்மையைத் தெரிந்துகொள்ளாதவர்களும், கூடினால், என்னநடக்கும் என்பதை அன்றைய நிகழ்ச்சி அழகாக எடுத்துக்காட்டுகிறது. மண்டபத்தைக்

(6 B பக்கம் பார்க்க)

சாமான்யமா!

A பக்கத் தொடர்ச்சி.

கோயில்போல அலங்கரிக்கவும், கதிரவன் ஒளி இருந்தபோதே எலக்ட்ரிக் விளக்குகளால் அலங்காரம் செய்யவும், ஓலைச்சுவடிக்கு எதிரிலே தேங்காய் பழம்வைத்து நைவேத்தியம் செய்யவும் அவர்களுக்குத் தெரிந்திருந்ததே யொழிய, கூட்டம் எந்த மனப்பான்மையினர் அதிகமாகக் கொண்டது, என்ற நாடிப்பரீட்சை நடத்தத்தெரிந்தவர்களல்ல. நிகழ்ச்சியிலே "விமரிசையான" பல நடக்கக்காணம் இதுதான். திரு T. K. சிதம்பரநாத முதலியாரும், கல்கி ஆசிரியரும், கூட்டத்தினிடையே எழுந்துபோய் விட்டனராம். இந்தஅளவு யூகமாவது மற்றவர்களுக்கு இல்லையே என்றுதான் ஆச்சரியப்படவேண்டி இருக்கிறது.

என் இவ்வளவு குழப்பம்? ஒருடஜன் பேரால் முடியுமா? மூலைக்கு மூலைஅமளி என்று நிருபர்கள் எழுதினரே, 'ஒருடஜன்பேரால் இப்படிநடத்தமுடியுமா? மாநாட்டை சர். பி. டி. இராஜன்திறந்துவைத்தபோது, குழப்பம்இல்லையே, காரணம் என்ன? அவருடையபேச்சின் போக்கு கலகத்தை பிறக்கச்செய்யக்கூடியதல்ல. மாநாட்டினரை வரவேற்று திவான்பகதூர் T. M. நாராயணசாமிப்பிள்ளைபேசிய கட்டத்திலேயே, குழப்பத்துக்கு விதைதூவிவிட்டனர் மாநாட்டினர். யாதுஅது? கேள்வித்தாளைக், கொடுத்த ஒரு இளைஞனை, மேடைமீதிருந்த மாநாட்டுத் தலைவர்களுள் ஒருவர் அடித்ததுதான்! யார் இவ்விதமாக நிலைமையைமறந்து, விளைவுயாதாகும் என்பதை யூகிக்காமல், கேள்வித்தாள் கொடுத்த இளைஞரை அடித்தவர்? லிபரேடர் பத்திரிகை தலையங்கத்திலே அவ்விதம் அடித்தவர் ஒருசர்க்கார் உத்யோகஸ்தர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் பெயர்என்ன? ஏன் அவர் மீதுவழக்கு தொடரக்கூடாது? என்று பலர் கேட்கும் கேள்விகளுக்குச் சுயமரியாதைக்காரனுடைய சுபாவமானபெருந்தன்மை, பதில் கூறாமல் இருக்கச்செய்கிறது!

கதிரேசரின் சீமையிருக்கிறதே செட்டிநாடு, அந்தப் பகுதியிலே காரைக்குடியிலே இருந்து வெளிவரும் குமரன் குழப்பத்தின் காரணத்தைவிளக்கியிருப்பதோடு, கதிரேசருக்குச் சிலயோசனைகளும் வழங்கியிருக்கிறது.

"கம்ப இராமாயணம் முதலிய நூல்களை ஒழிக்கவேண்டுமென்று ஒரு கூட்டத்தார் கூறி வருகிறார்கள். இப்படிக்கூறுவது பல ஆண்டுகளாக நிகழ்ந்துவரும் நிகழ்ச்சியே யாகும்.

பண்டிதமணி அவர்கள் தலைமையுரையை அருமையாக எழுதிக்கொண்டு போயிருக்கிறார்கள். என்றாலும், அதைப் படிக்க ஆரம்பிக்குமுன்பாக ஏதோ ஒரு முகவுரை சொன்னதாகச் செய்திவந்திருக்கிறது. அதில் என்ன சொன்னார்களென்பது தெரியவில்லை. அதிலிருந்துதான் சிலருக்குப் பலமான கோபம் தோன்றியிருப்பதாக ஊகிக்கவேண்டி இருக்கிறது. ஒரு குழுவினர் மனுதர்ம சாத்திரத்தைக் கொளுத்தினார்கள். கம்ப இராமாயணத்தைக் கொளுத்தவேண்டுமென்றனர். பின்னர் பெரிய புராணத்தையும் சேர்த்துக் கொளுத்தவேண்டுமென்றனர். மனுதர்ம சாத்திரத்தைக் கொளுத்தும்போது பண்டிதமணி ஒன்றும் பேசவில்லை, கம்ப இராமாயணத்தைக்கொளுத்தவேண்டுமென்றபோதும் பேசவில்லை! பெரிய புராணத்தையும் சேர்த்துக்கொளுத்தவேண்டுமென்றபொழுதுதான் பண்டித மணியவர்கள் ஒரு அறிக்கை வெளியிட முற்பட்டார்கள். இம்மூன்று இலக்கியங்களையும் கொளுத்துவது பிழையென்று கூறினார்கள். மனுதர்மம் இலக்கியம் என்றுகூட எழுத அவர்கள் மனம் இடந்தந்தது. கொளுத்துகிறகட்சிக்காரருக்குப்பண்டிதமணியின் முன்னை பேச்சுகளோடு அன்றைய உரையும் சேர்ந்து ஆத்திரத்தை மூட்டிவிட்டிருக்கிறதென்று தோன்றுகிறது.

இவர்களுடைய தகுதியை நோக்கும்போது சென்னைக்குப்போய்க் கம்பர் விழாவில் தலைமைவகித்துச்சீரழியவேண்டியதில்லை. சென்னைக்குப்போவானேன்? போனாலும் தகுந்த ஏற்பாட்டுடன்போயிருக்கலாம். இப்படிப்பட்ட நிலைமைக்குச் சந்தர்ப்பமிருக்குமென்பது சொற்ப அறிவுள்ளவருக்கும் தெரிந்ததுதான். இதன் உண்மையை முன்னதாகவே தெரிவிக்கக்கூடிய ஒரு நண்பராவது சென்னையில் பண்டிதமணிக்கு இல்லாமல் போய்விட்டது வருந்தத்தக்கது. கம்பர்விழா நடைபெற்ற நூற்றுக்கணக்கான ஊர்களில் கொளுத்துகிற கட்சிக்காரர் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால் இப்படிப்பட்ட கொடுமை நடக்கவில்லை! பண்டித மணியவர்கள் சென்னை முதலிய இடங்களில்கூட்டப்படும்இப்படிப்பட்டகூட்டங்களில் கலக்கும்போது பொறுப்புள்ளவர்களின் சார்பிலும், முன்னெச்சரிக்கையுடையவர்களின் கூட்டுறவிலும் செல்லவேண்டிய தவசியமென்றும் தெரிவிக்க விரும்புகிறோம்."

நாமும் கூறுகிறோம், கதிரேசருக்கு மட்டுமல்ல, கலையின் பெயர்கூறி ஆரிய வலையிலே தமிழரைச் சிக்கவைக்கும் தோழர்கள் அனைவருக்குமே, "ஐயன்மீர் வேண்டாம்! தீபரவுகிறது, விலகிநில்லுங்கள்! வம்பை விதைக்காதீர்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் வருத்தத்தைக்கொடுக்கின்றன. குருக்ஷேத்திரயுத்தம்வேண்டாம், என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். சாமான்யர்! கூறுவதா, நான் கேட்பதா என்று எண்ணுபவர்களிடம் நாம் என்ன சொல்லமுடியும். கோகலே மண்டபக் கோலகலத்தைப்போல நிகழ்ச்சிகள்நடந்தாலும், இராமாயணமென்றால் சாமான்யமா, அதுமகாதொல்லையல்லவா தருகிறது, ஒலிபரப்பு உடைகிறது, ஓலைச்சுவடி வீசி எறியப்படுகிறது, மற்போர் நடக்கிறது, இவ்விதமாக இருக்கிறதே, இது சாமான்யமல்லவே! என்று கூறுவதன்றி வேறென்ன கூறமுடியும்!!

——

திருமணம்.

(26—4—44) புதன்கிழமை காலை 7½ மணிக்கு என் குமாரன் திருநிறைச் செல்வன் R. A. இராசமாணிக்கந்துக்கும் இராசீபுரம், திரு. நா. இராமுடு செட்டியார் பௌத்திரியும், N. R. நாராயண செட்டியார் குமாரத்தியுமான திருநிறைச் செல்வி அலாந்தலக்ஷ்மிக்கும் சேலம் சூரமங்கலம்ரோடு திரு. தே. வீ. ந. வருதராஜுலு செட்டியார் பங்களாவில், திருமணம் நடத்த உறுதி செய்திருப்பதனால், தாங்கள் அன்பர்களுடன் வந்திருந்து அதனைச் சிறப்புற நடத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

ரா. சு. அருணாசலம் செட்டியார்,
நூல் & ஜவுளி வர்த்தகம்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

நிகழ்ச்சிமுறை.

26—4—44. புதன்கிழமை காலை 9½ முதல் பெரியார் E. V. R. அவர்கள் தலைமையில் தோழர் C. N. அண்ணாத்துரை அவர்களால் திருமணம்யென்பது பற்றி சொற்பொழிவு நடைபெறும்.

——

திராவிட மாணவர் பிரசாரக் கமிட்டிக்கூட்டம்.

ஈரோட்டில், பெரியார் மாளிகையில் 16—4—44-ந்தேதி திராவிட மாணவர் கூட்டம் நடைபெற்றது. தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து, திராவிட மாணவர்கள் வந்திருந்தனர், இந்த விடுமுறை நாளில் பிரசாரம்செய்ய ஒரு திட்டம் வகுக்கப்பட்டது.

——

திராவிட வாலிபர் மாநாடு.

ஈரோட்டில் 17-4-44-ந்தேதி சாசுவதிஹாலில் C. N. அண்ணாத்துரை தலைமையில் நடைபெற்றது. தோழர் நெடுஞ்செழியன் கொடி ஏற்றினார். தோழர் அன்பழகன் மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

…யது, அதன் விளைவே குழப்பம், என் …தை, விளக்கமுடியும், சு. ம.க் …க்கண்டபடி ஏசுவதற்கு இந்தச் சந் …ர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட …த்திரிகைக்காரர்களின்எழுத்திலிருந்தே. …ரணமின்றி, ஒருசிலர், குழப்பம் விளை …த்தனர் என்றும், அந்தக்குழப்பத்தை …ராதிவீரர்கள் வென்றுவிட்டனர் என் …ம் விளக்க அப்பத்திரிகைகள் பாவம், …ச்சிரமப்பட்டுள்ளன! பெரியதோர் …ிர்ப்பை அடக்கியபெருமை தங்கட்கு …ண்டு என்றுகூறி வீராதிவீரர்கள் என்ற …ட்டமும், வெற்றி மாலையும் வீர …ண்டாமணியும், தோடாவும் அவர்கள் …ணிந்துகொள்ளட்டும், நமக்குக்கவலை …ல்லை, ஆனல் ஒருசில சு. ம.க்களின் …விந்தனம் இதுஎன்று கூறுவதும், …தேசமயம் பெருத்தகுழப்பம், சமா …ிக்கமுடியாத குழப்பம், தலைவர்கள் …பாலில் பந்தோபஸ்துடன் வீடுதிரும்ப …வண்டிய அளவு நிலைமையைமாற்றிய …ழப்பம் என்று, கூறுவதும், பிறகு, …ாநாடு விமரிசையாக நடந்தேறியது …ன்று கூறுவதும், ஒன்றுக்கொன்று …ஞ்சமாவது பொருந்தியிருக்கிறதா …ன்பதை எண்ணிப்பாருங்கள். இங்ங …ம் பொருந்தாஉரை எழுதுவது அறி …ாளிகளின் நகைப்புக்கிடந்தருவதாகும், …னல் புராண மனப்பான்மையினருக்கு …து அதிசயமாக இராது. அண்டத்தை …திசேஷன்தாங்குகிறான், அதே ஆதி …சேஷன்மீதுதான் திருப்பாற்கடலிலே …ருமால் பள்ளிகொண்டிருக்கிறார், …ர்வதிபரின் விரலிலே ஆதிசேஷன் …மாதிரமாக இருக்கிறான், அந்தப் பார் …தி கடனுக்குள்ளோ இல்லை, கைலாய …லைமீது பரமசிவனில் பாதியாக இருக்கி …ர்கள்! இதுதானே புராணம்! இதிலே …யாசியுங்கள், ஆதிசேஷனைப்பற்றிய …தைகளிலே ஒன்றுக்குஒன்று பொருந்து …றதா என்று! இதைப்போலத்தான் …ருக்கிறது, "நிருபர்கள்" தீட்டியுள்ள …கழ்ச்சி விவரமும்.

…நடுப்பகல்—சுடுமணல்—பெரு நடை …கமான பயணம். இந்நான்கு தலைப்புகளை …ம் ஒரே விஷயத்திலே உபயோகிக்கும் …லை நீங்கள் என்னவென்று கருதுவீர் …ள்! என்ன அண்டப் புளுகனய்யா இவன், …டுமணலிலே நடுப்பகல் நேரத்திலே ஒரு …ன் பெருவேகமாக நடந்தால் அது எப் …டிச்சுகமான பிரயாணமாகும், வேதனை …டன் வெப்பத்தால் வதைக்கப்படுபவ …ைச் சுகம் கண்டான் என்று கூசாது …றுகிறானே, சொல்வார் சொன்னாலும் …கட்பாருக்கு மதி எங்கே போயிற்று, …ன்றுதானே, கூறுவீர்கள். சரி, மற்று …மான்று கேளுங்கள். பட்டப்பகல்-கட் …டைச்சாரீரம் —திட்டமில்லாத்தாளம் …ிவ்யமான இசை விருந்து-என்று இந் …ான்கு தலைப்புகளாலும் ஒரு சங்கீதக் …ச்சேரியைப்பற்றி ஒருவர் விமரிசனம் …ழுதினால் என்ன சொல்வீர்கள்? தாளம் …கெட்டுக், குரல்கெட்டுப், பாட்டின் இனிமை பரிமளிக்காத பகலிலே எவனோ பாடினால் அது கழுதை கத்துவது போலிருக்குமேயன்றி, கானமாகவா இருக்கும், இதைப்போய்எவனோ, திவ்யமான இசை என்று கூறினானே, என்ன திமிர் இவனுக்கு, நம்மை இவன் எவ்வளவு ஏய்க்கப்பார்க்கிறான் பார்த்தீர்களா, என்று கேட்பீர்களா, மாட்டீர்களா? சரி, இதோ படியுங்கள், கம்பர் மாநாடு சம்பந்தமாக ஆரியஏடுகள் வெளியிடும்தலைப்புகளை.

கம்பர் திருவிழாவில் சு.ம.க்கள் கலகம், மைக்குகள், டிரான்ஸ்மிட்டர் நொறுங்கின.

கூட்டம் அமைதியாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது.

இது, சுதேசமித்திரன் தலைப்புகள்! என்ன சொல்கிறீர்கள்? உங்களால் முடியுமா இதுபோலப், பொருந்தாத உரையைக் கூச்சமின்றிக்கூற. மைக்குகளும், டிரான்ஸ்மிட்டரும், நொறுங்கிய கூட்டத்திற்கு மித்திரன், சூட்டும் பட்டம் என்ன பார்த்திர்களா? அமைதியாகவும் விமரிசையாகவும் நடந்ததாம்கூட்டம்! என்ன அமைதி! எவ்வளவு அழகான விமரிசை!! பொட்டைக் கண்ணனுக்குப் பெயர், கண்ணாயிரம், ஒற்றைக்காலனுக்குப் பெயர் தாண்டவராயன், இந்தக்கூட்டத்துக்குப் பெயர், அமைதியும் விமரிசையுமாகநடந்த கூட்டம்!!

தலைப்புகள் மட்டுமா, கூட்ட நிகழ்ச்சியைப்பற்றி, நிருபர்கள் தீட்டிய வாசகங்களைப் படியுங்கள், அந்த அமைதியின்அழகும், விமரிசையின் விசித்திரமும் விளக்கமாகத் தெரியும். இதோ, தினமணியின் திருவாக்கு, கேளுங்கள்.

சுயமரியாதைக் காடிகள் புகுந்து கலாட்டா செய்தன. இது ஒருதலைப்பு!! இந்த நிருபரிடம் நமக்கு உண்மையிலேயே பரிதாபமாகத்தான் இருக்கிறது. பாருங்கள் பாவம், அந்தமனுஷ்யர் எவ்வளவு அப்பாவியாக இருக்கிறார். சுயமரியாதைக்காரனையோ, காடியையோ, அவர் கண்டவராக இருந்திருப்பின், சுயமரியாதைக்காடிகள் என்று எழுதுவாரா? மேலும் கேளுங்கள், தினமணி நிருபரின் உரையை.

"**மைக்கு கவிழ்ந்தது, ஒலிபெருக்கி நொறுங்கியது, நாற்காலி பறந்தது**" இவை தலைப்புகள். மேலும் எழுதுகிறார் அந்த நண்பர், "சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லிக்கொண்ட சுமார் ஒரு டஜன் நபர்கள், ஒருமணிநேரம் ஒன்றும் நடக்கவிடாமல் பெருத்தகலாட்டாச்செய்தார்கள். மேடைமீது நாற்காலிபறந்தது. ஒலிபெருக்கி உடைந்து உருண்டது. மகாநாட்டு நடவடிக்கைகளைப் பிராட்காஸ்ட் செய்ய அகில இந்திய ரேடியோக்காரர்கள் வைத்திருந்த மைக்கும் தகர்க்கப்பட்டது. பூமாலைகள் தலைசுற்றித் தூக்கி எறியப்பட்டன. பரிசுகொடுக்க வைத்திருந்த புத்தகங்களும் ஓலைச்சுவடிகளும் வீசிஎறியப்பட்டன. இவ்வளவுக்கும் சிகரம்வைத்தாற்போல் அவர்களில் ஒருவர் பேசிவிட்டார்"

இத்துடன் நிறுத்தினாரா அந்த நிருபர். ஒரு சுயமரியாதைக்காரர் அந்த மேடையிலே பேசியது, சிகரம் வைத்ததுபோலிருந்தது என்று எழுதினாரே, அவர் தமது அருமையான எழுத்திற்குச் சிகரம்வைத்ததுபோல ஒன்று எழுதியிருக்கிறார். என்ன அது!

இவ்வளவு கலாட்டாவிலும் கூடி இருந்த மக்கள் காட்டிய அமைதி அவர்களுக்குக்கம்பனிடத்தில் உள்ளபக்தியை நிதர்சனமாக்கிற்று". என்னே, அந்த மக்களின் பொறுமை! மைக்கவிழ்ந்தாலென்ன, டிரான்ஸ்மிட்டர் நொறுங்கினாலென்ன, மேடைமீதிருந்த சிலருக்குக்கன்னத்தில் அறைவிழுந்தாலென்னவென்று, அவைகளைப்பற்றிக் கவலைப்படாமல், அந்த மாபெருங்கூட்டம், ஒருடஜன் சு.ம.க்களின் கலாட்டாவைப்பற்றிக்கவலை கொள்ளாமல், கம்பபக்தியிலே தம்மை மறந்திருந்தனராம்!!

"அந்தப்பகுதிதான் ஆச்சரியமாகுதடி" என்று புரட்சிக்கவி கனகசுப்புரத்தினம் கூறுகிறாரே, அதுபோல் கூறலாம், இந்த நிருபரின் இந்தப் பகுதிக்கு!! நீங்கள் நம்புகிறீர்களா, ஒரு பெருங்கூட்டம், ஒரு டஜன்பேர்வழிகள், இவ்வளவுகலாட்டாச் செய்வதைக்கண்டும், அமைதியாகயிருக்குமென்று. ஒன்று பதுமைகளை அந்தச் சபையிலே வைத்திருக்கவேண்டும், அல்லது, அந்த மக்கள் கம்பர் மாநாட்டின் கதி இப்படித்தான் ஆகவேண்டும், சரியான காரியம் நடக்கிறது என்றுஎண்ணி மகிழ்ச்சியுடன் அக்காட்சியைக் கண்டு இருந்திருக்கவேண்டும், அல்லது, மாநாட்டுமணிகள், மக்கள் மனதிலே ஏற்கனவே வெறுப்பு எழும் முறையிலே நடந்துகொண்டிருந்திருக்கவேண்டும், அதனால், அடாதுசெய்தோர் படாதுபடுவர் என்று எண்ணி, அக்கூட்டம் சிறுவிரலையும் அசைத்திடாது இருந்திருக்கவேண்டும்; இதுதானே இயற்கை! குட்டுவெளியாகாதிருக்கவும், குழப்பம் விளைவித்ததற்குக் காரணம் சில சு.ம.க்கள் என்று கூறித்தீரவேண்டுமென்பதற்காகவும், தினமணி நிருபர், அன்றையக்கூட்டத்திலே உட்கார்ந்திருந்தவர்கள்பதுமைகள்என்று கருதும்படி, எழுதியிருக்கிறார்.

"கோகலே ஹால் ஒருகோயில் மண்டபம்போல் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்களவாத்தியம்முழங்கமாநாடு ஆரம்பமாயிற்று" என்றுஎழுதுகிறார் நிரு

(6ம்பக்கம் பார்க்க.)

சாமான்யமா!

5ம் பக்கத் தொடர்ச்சி.

பர். மங்கள வாத்யத்துடன் ஆரம்பமாகி அமங்களமாக முடிந்ததன்காரணம் என்னவோ, நாமறியோம்.

"ஸ்ரீகதிரேசன் செட்டியார் தமதுதலைமைப்பிரசங்கத்தைச் செய்ய எழுந்தார். அவர்சில வார்த்தைகள்கூடப்பேசியிருக்கமாட்டார், குழப்பம்ஆரம்பித்துவிட்டது. ஆரிய அடிமை கதிரேசன்செட்டியாரே எங்கள் கேள்விக்குப் பதில்சொல்லுங்கள் என்று ஒருசிலர் கத்திக்கொண்டு மேடைமீது ஏறிவிட்டனர்.

முன்னேவந்த ஒரு குள்ளமான ஆள் ஒரு நாற்காலியைவீசி மைக்கை உடைத்துத்தள்ளிவிட்டான். அதன் தலை கவுண்கல்மாதிரி சென்றது. நிருபரின் தலைதப்பியது தம்பிரான் புண்ணியமாகிவிட்டது.

அதே ஆசாமி ஒலிபெருக்கியையும் ஒரு குத்துவிட்டுத் தள்ளிவிட்டான். மாலையைத் தலைசுற்றித் தூக்கியெறிந்தான். மண்பாண்டங்கள் "மடார்" என்று போட்டு உடைக்கப்பட்டன.

இதற்கிடையில் கூட்டத்திலிருந்து சிலர் மேடைமீது ஏறிஅமர்ந்தனர். வெகு சிரமப்பட்டு கலாட்டாக்காரர்கள் மேடையைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டார்கள்" என்று கூறுகிறார்.

இதிலே ஒரு சூட்சமம் பார்த்தீர்களா? நாசுக்கான திரைவிடுகிறார்நிருபர்! கேள்விகளுக்குப் பதில்கூறுக என்று கூச்சலிட்டனராம் சிலர். என்ன கேள்வி! எப்போது யார்கேட்டனர்? என்பதுபற்றி நிருபர் ஒன்றும் கூறவில்லை. உண்மை என்ன? மாநாட்டிலே சென்னைச் சுயமரியாதைக் கழகத்தினரால் அச்சடிக்கப்பட்ட இரண்டு கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டன. அக்கேள்விகளுக்குத்தான் பதில் கோரினர். பதில்இல்லை, எனவே, பதில்கூறுமாறு கூச்சல் கிளம்பிற்று. சகல கலாவல்லபர்களுக்கு எழுதப்படிக்கக்கூடத்தெரியாத சு.ம.க்களின் கேள்விகளுக்குப் பதில்கூறத்தெரியாமற்போன காரணம் என்ன? மகாமகா உபாத்தியாயர்களும், இலக்கியப்பூங்காவின் காவலர்களும் கொலுவீற்றிருந்த அந்த அலங்கார மண்டபத்திலே, கேள்விகளுக்கு அதிலும் காவியமறியாச்சுயமரியாதைக்காரர்களின் சாமான்யமான கேள்விகளுக்குப் பதில் கூறாதது என்? இது மக்கள் மனதிலே, எரிச்சலை உண்டாக்கியிராதா? அதுவரை கம்பதாசராக இருப்பவருக்குங்கூட, மயக்கம்போய், சந்தேகமல்லவா பிறக்கும். இது என்ன ஆச்சரியம் சு.ம.க்களின் கேள்விகளுக்குப் பதில்கூற இந்தப்பெரும் புலவர்களுக்கு என் திண்டாட்டம், திணறல், இப்படிப்பட்ட பெரிய பண்டிதர்களின் வாயைஅடக்கும் கேள்விகள் தயாரிக்க, சு.ம.க்களுக்குப் புலமைகிடையாதே, ஆகவே, கதையிலே கேள்வி கேட்டால் பதில்கூற முடியாத அளவு ஆபாசம் இருக்கிறது என்பதல்லவா தெரிகிறது, இப்படிப்பட்ட கதைக்கு விழா ஒருகேடா, என்று எண்ணமலிருந்திருப்பார்களா, என்று கேட்கிறோம்.

இந்தச்சமயத்திலேதான் பண்டிதமணி கதிரேசர், நான் மற்போர் புரியும் பருவம் கடந்துவிட்டேன், சொற்போருக்கு நான் தயார்என்றுகூறினார்போலும்! கதிரேசரிடம் படித்தமாணவர்களிற் சிலரே, அவரது இவ்உரையைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு, எந்தத்தேதியில்எந்தஇடத்திலே சொற்போர் ஏற்படுத்தலாம், நான் தயார், நீர்தயார்தானா, என்று கதிரேசருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனராம். பொறுத்திருந்து பார்ப்போம், அந்தச் சொற்போரையும்!

ஒரேடஜன் பேர்வழிகள்தானாமே, நிருபரின் கணக்குப்படி. அவர்கள் செய்த கலகம் என்ன விளைவுதந்தது தெரியுமா, அதேநிருபரின், வாசகத்தின்படி தலைவரால் பிரசங்கத்தைப்படிக்க முடியவில்லை. திரு T. P. மீனாட்சிசுந்தரர், அதனை வாங்கி வாசித்தாராம். முடித்தாரோ? இல்லை! அவருடையகுரல் கம்மிவிட்டதாம், குழப்பம் நின்றபாடில்லையாம். அவருடையகுரல் கம்மலாகிவிட்டது என்றால் அது சாமான்யமா? நிருபர் கூறுகிறார், ஸ்ரீ T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமது கெம்பீரமான குரலிலே வாசிக்க ஆரம்பித்தார் என்று. அந்தக் கெம்பீரக் குரல்கம்மலாகிவிடவே, திரு. T. S. நடராசப்பிள்ளை அவர்கள், அதனைவாங்கி வாசித்தாராம். விமரிசையான மாநாடு, சந்தேகமாஉங்களுக்கு! ஒருடஜன் எதிர்ப்பாளர்களின் கலாட்டாவால், கம்பபக்தியில் தம்மை மறந்து அமைதியாக இருந்த அப்பெருங்கூட்டத்திலே பெரும்புலவர் கதிரேசர் தமது தலைமை உரையைப் படிக்கமுடியாத்திகைப்பாளரானார், கெம்பீரக்குரலாளர் ஸ்ரீ T. P மினாட்சிசுந்தரனார் முயன்றார் முடியாமற் போகவே அமர்ந்தார், பின்னர்தேசியமுன்னணிக்கு செங்கற்பட்டு வட்டார அமைப்பாளராகஉள்ள திரு. T. S. நடராஜப் பிள்ளை படித்துமுடிந்தார். அப்பொழுதுஅமைதி அரசாண்டதா? அதுதானேஇல்லை! குழப்பந்தானும், அதேநிருபர்கூறுகிறார். பிறகு ஸ்ரீ R. P. சேதுப்பிள்ளை, சொற்பெருக்காற்றத் தொடங்கினாராம். மீண்டும்குழப்பம்தானும். வீரவுரை நிகழ்த்தலானாராம் பிள்ளை, காரமாகிவிட்டதாம் கலகம், பிள்ளை அமர்ந்தாராம், பெருங்குழப்பமாம், போலீஸ்வரவழைக்கப் பட்டதாம், மீண்டும் குழப்பமாம்! அமைதியும் விமரிசையும், அடைமொழிகள், அக்கூட்டத்துக்கு! அந்தநிருபரின் தாராளத்தைப்

பாருங்களேன், விளக்குமாற்றுக்கு வெ
சாமரம் என்று கூறிடும் வித்தைபோல
லையா இது. தினமணி நிருபரின், ெ
திச் சித்திரம், தலைவர் போலீஸ்பந்தே
பஸ்தில் வெளியே சென்றார் என்ற
ர்த்துடன் முடிகிறது! விமரிசையாக ந
தேறிய மாநாடு தோழர்களே, இ
அமைதிநிலவிய மாநாடு, கம்பபக்திய
மக்கள் கட்டுண்டுகிடந்த மாநாடு, ஆமா
அதைமறந்து விடாதீர்கள்!!!

வேறுசில விசித்திரங்கள் பாரததே
பகருகிறாள். படியுங்கள் அதனையும்.

"கம்பர் திருநாள் நடக்கவொட்டாம
செய்யவேண்டுமென்று சிலர் கங்கண
கட்டிக்கொண்டு வந்திருந்த போதிலு
கலாட்டாக்களை எல்லாம் பொருட்படு
தாமல், கம்பர் மாநாடு கோகலே மண்
பத்தில் விமரிசையாக நடந்தேறியது"

இத்துடன், பாரததேவி நிருபர் நிறு
திக்கொண்டாரா? இல்லை! விமரிசையா
நடந்தது மாநாடு என்பதற்கு ஆதா
கூறாமல் இருப்பதா? எழுதுகிறார் அ
நிருபர்.

"மேடைமீதிருந்த சிலருக்குக் கன்னத்தில் அறை ஒலிபரப்பும்கருவி கீழே தள்ளப் பட்டது.

விமரிசையாக நடந்ததல்லவா, மாநா
போதாது என்கிறீர்களா, விமரிசையா
என்பதற்கு விளக்கம்? சரி, விளக்கத்த
குப் பஞ்சமில்லை, படியுங்கள் பாரததே
நிருபரின்எழுத்தை. அவர்மேலும் கூறு
றார்.

"சிறுபான்மையோர் ஆரிய அடிமை
ஒழிக என்று கூவினர். ஒரு இளைஞ
மேடைமீதேறி ஆவேசம் வந்தவ
போல் ஒலிபரப்புக் கருவிகளைக் கீழே
தள்ளினான். கம்ப இராமாயண ஓலை
சுவடி, மேஜைமேல் புஷ்பஹாரத்துட
இருந்ததையும் கீழே தள்ளிவிட்டு, அ
னைப்பிடிக்கப் போனவர்களிடமிருந்த
திமிறிக்கொண்டு கீழேஇறங்கிவிட்டான்
கேட்டீர்களா வேடிக்கையை, ஒரே ஒ
இளைஞன், மேடைமீது ஏறி அவ்வள
செய்கிறான், மேடைமீதிருந்தவர்கள் அ
னைப்பிடிக்க முயற்சிசெய்யாமல் இல்லை
முயற்சிசெய்து பலிக்கவில்லையாம்!! இ
னால் சு. ம. வின் முரட்டுத்தனத்தை
தெரியப்படுத்தி விட்டதாக அந்தநிருபர்
திருப்தி அடையக்கூடும். முதல்தடவை
அந்தநிருபரின் செய்தியைப் படிப்போ
ரும் அதுபோலவே, கருதுவர். ஆனா
அடுத்தவிநாடி தோன்றக்கூடிய எண்ணம்
என்ன? என்ன அதிசயமய்யா இத
ஒரே ஒருபயல், அவனைப்பிடிக்க மேடை
மீது இருந்தவர்களெல்லாம் முயன்றுமா

(A-பக்கம் பார்க்க.)

சிறந்த முறை.

எது சிறந்தமுறை? பழமையிலேநெளிந்து, புதுமை என்ருல் புலம்பிடும் முறையா? புதுஉலக வாழ்வுக்கு ஊறுதேடுவன எவையெனினும் காலமெனும் கவசமோ, கலை எனும் முலாமோ பூசப்பட்டு வரினும், அவைதமை அறவே அகற்றுதலா?

அன்பர் அரங்கசாமி, இளைஞர், புலவர், கரந்தைக் கல்லூரியிலே ஆசிரியராக உள்ளவர், அவர் குடந்தை மாணவர்மாநாட்டிலே பழயநூலிலே பாய்ந்த ஆரியம், பாடபேதமெனும் சூதால் தமிழரைக்கெடுத்தசதி ஆகியவற்றை விளக்கிப்பேசினர். அதுவே சிறந்தமுறை என்ற தலைப்பிலே இங்கே நீங்கள் காண்பது.

திராவிட இளைஞர்களே, மாணவர்களே, "தமிழாகேள்" என்றசொற்பொழிவின் பின் பேசப்படுவது சிறந்த முறை, என்பது. தமிழாகேள் எனக்கூறுங்கால் எதனை என ஒருவர் வினவின், அவ்வினுவிற்கேற்ற தலைப்பே, யாம்கொண்ட அமைப்பாகும், அச்சிறந்தமுறைதான் யாதெனின், இலக்கிய இலக்கணங்களின் உண்மைகாணும் உள்ளறிவேயாகும். எங்ஙனமெனின், எல்லாப்பொருளும் இதன்பாலுள இதன்பால்இல்லாதஎப்பொருளுமிலையால் எனப்படும் திருக்குறளின்கண் ஒவ்வொரு பொருளும் சிறப்புறப், பலருக்கும் பொருந்தும் வகையில் பகரப்பட்டுள்ளது. இங்ஙனஞ்சிறப்புற மெய்ப்பொருள்கூறும் வாய்மைதவிர மெய்ம்மையாளராம் வள்ளுவனுரே,

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என அறிவுறுத்திச் சென்றனரெனின் ஏனையர் எந்நிலையுறுவர் என இயம்பவும் வேண்டுமோ? அங்ஙனம் மெய்ப்பொருள் காணும் மேன்மையே எய்ப்பினில் வைப்பாய் இலங்கித்தோன்றும். அவ்வறிவை நோக்கமாகக்கொண்டு பாக்களின் பண்பியல்புகளைப் பகரவந்த வெண்பாப்பாட்டியலைவிரைந்து காணுங்கால் வேறுபாடுகள் மிகப்பல விளங்கித் தோன்றுகிற்கும். பிறப்பு வேற்றுமையாற் சிறப்புக் கருதாத் தமிழரிடையே பிறப்பினுல் உயர்வு தாழ்வுகளை உண்டாக்கும் இயல்புகளையே அப்பாட்டியல் அறிவுறுத்துகின்றது. அவை எழுத்துகளுக்குச் சாதிவகுப்பதும், சாதிகளுக்கேற்பப்பாக்களை வரையறுப்பதும் ஆகிய பலவாம்! இன்னும் அதனுட் கூறப்படும் பத்துவகைப் பொருத்தங்களும், இங்ஙனமே சாதிவேறுபாடு கற்பித்து உயர்வுதாழ்வுகளை உணர்த்துந் தன்மைய. இவையாவும் முற்காலத்துக் காணுத இயல்பினவென்பது கணப்பொருத்தமாய ஒன்றைத் திங்களைப் போற்றுதும் என்று தொடங்கும் சிலப்பதிகாரத்து அமைத்துப் பார்ப்போமாளுல் பொருந்தாமையினுல் தெளிவுறும். எனவே, வெண்பாப்பாட்டியலின் வேட்கைகொண்டு நிற்கும் பாவலர்கள் இதற்குயாது அமைதி கூறுவர்? இதுபோன்று பலகருத்துகளும், இடைக்காலத்தே புகுந்து இன்னல் தருவனவாயின. இது கருதாத புலவர் பலர் பாட்டியலுக்குப்பொருத்தமில்லாதபாக்களையும், நூல்களையும் பழிப்பாராயினர். மேலும் அவ்விலக்கணத்தோடு முரணுவகையில் இன்றும் நின்று எதிர்த்துவருவரேல் அவர்தம் அறிவை வியத்தலன்றி, வேறென்செய்தல்கூடும்; என்பீராகில் அறிவுகொளுத்துதல் ஆன்ருேர் கடன் என்பதே யாம்கூறும் மாற்றமாகும். எனவே, இவ்வாறு காலத்தொடு பட்டுரைக்கப்படினும், இக்காலத்துக் கொள்ளுவனகொண்டு தள்ளுவனவற்றைத் தள்ளுதலே ஏற்புடைத்தாம். அங்ஙனமன்றி, கொள்ளுவோமாயின் கலம்பகத்து, இடைச்சியார், கொற்றியார் எனத்துறைகள் பல அமைக்கப்பட்டு, எழுச்சியில் நிலைமையையே ஏற்று இழிநிலைஅடைதல் உறுதியாகும். ஆதலின் விழிததிருந்து எழுச்சிபெறுங்காலமிதுவாகும். இளைஞர்களே! எதிர்காலத்து ஆவனசெய்ய முற்படுக.

தன்மானமுள்ள தமிழிளைஞர்களே, தொன்றுதொட்ட தமிழ்மக்களின் தனிப்பண்புகள் தாம் யாவையெனின், அவைதாம் நந்தமிழ்ப் பெருநூலாம் பொதுமறை போற்றிய பொய்யாமொழிகளாகும். அவை பொன்மொழிகளென்றும் புகலவும்படும். இன்னணம் தமிழர் பண்பினைத் தெரிக்கும் திருக்குறள், தமிழ்மறை என்பதும், தமிழர்க்கே உரியநூல் என்பதும், பல்லாற்ருனும் தெரியப்படும், அதற்குச் சான்றுகூறி மேற்செல்வாம். முதற்கண் "மானம்" என்பதுதமிழர்க்குத் தகவுதரும் பண்பு. மானத்தையிழந்தும் உயிரைக்காத்தல் வேண்டும் என்பது வடமொழிக்கொள்கை. உயிரினும் மானத்தைப் பெரிதாகமதிக்க வேண்டுமென்பது தமிழ்க்கொள்கை. அதனை எடுத்துரைக்கவந்த வள்ளுவர், இறத்தலைப் பெறினும், தந்நிலைகுன்றவரும் செயல்களைக எனுங்கருத்தையுட்கொண்டு,

"இன்றியமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்"

என்றுவலியுறுத்திச் சென்றனர். இன்னும் தமிழனின்தனிப்பண்பதனை, உயிர் நீப்பர் மானம்வரின் எனப்பின்னரும் உறுதிகொள்ளுமாறு உணர்த்தினர். இது போன்றே எற்றந்தரும் இரவாமைப்பண்பும் தமிழரின் தனிச்சிறப்பினை உணர்த்தி நிறப்பதாகும். இரவாமை திராவிடர்க்குள்ளது, இரத்தல் ஆரியருக்குள்ளது. இவைபோன்றே முற்றும் முரண்பட்ட கொள்கைகளை யுடையவர்களே ஆரியர்கள். இவற்றைக்கொண்டு ஆரியர், யார்! திராவிடர்யார் என அறிந்துகொள்க. இக்கருத்தினை நம்சங்கச்சான்ருேர்களும் நமக்கு அறிவிப்பான் புகுந்து அழகுபட உரைக்குந்திண்மை அறிந்து மகிழற்பாலது. அவை, ஈயென்கிளவி "யிழந்தோன் கூற்று" "ஈயெனஇரத்தலே அரிது" ஈயெனஇரத்தல் இழிந்தன்று "நல்லாரெனினும் கொளல்தீது" என்பனவாகும், இவற்ருல் இரத்தல் தமிழர்க்குரியதன்று என்பது வெற்றிடை விலங்கலாய்இலங்கி நிற்கின்றது. இவ்விரத்தலைக் கொடுமையெனக்கொண்டகுறளாசிரியர் தமிழர்க்கு அறிவுறுத்தக் கருத்துக்கொண்டு கூறுகின்ருர். அக்கூற்றின் உண்மை நிலைநோக்கும் ஒவ்வொரு தமிழனும் உளங்கொண்டுதந்நிலைகாக்க முற்படுவான் எனமொழிதலும் வேண்டுமா! இறைவனே ஒருமகனை இவ்வுலகில் இரந்துநின்று உயிர்வாழ் வேண்டும் என்று கூறினும் கொள்ளற்க என்பார்,

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக வுலகியற்றியான்"

என அறிவுறுத்திச் செல்லாநின்ருர். தமிழன் தந்நிலையைக் காத்தற்குக் கடவுளையும் கெடுக எனக்கூறுவதும், தமிழ்ப் பெண்மணிகள் தங்கற்பினைக்காத்தற்குக் "கடவுளாயினுமாக மடவமன்ற" என ஆணையிடுவதும் ஆரியத்தினின்றும் வேறுபட்ட திராவிடத்தின் சீரிய பண்புகளாகும். ஆரியத்தினின்றும் அகற்றுதற்கு அறிவு கொளுத்திவந்த ஆன்றவிந்தடங்கிய சான்ருேர்களை, ஆரியர்களும், ஆரியத்தில் அடிமையுற்றிருக்கும் அன்பர்கள் பலரும், சூழ்ச்சியினுற்சூழ்ச்சிகூற முற்படுவான் கடவுளைக்கெடுக என்று கழறிய புலவனும் செந்நாப்புலவனே? அன்று, புன்புலவன் எனப்புகன்று போதிய சான்றுகொண்டு நிறீஇப்புலைச்சி மகன் என்று மொழிந்து இழித்துரைப்பாராயினர். இன்னணம் இழித்துரைக்கும் கூற்றுக்களுக்குக் கூற்றுநின்று குமைப்பதற்கேஇன்றைய இளம்புலவர்கள் எழுச்சி பெற்றுள்ளனர். இதனைக்கண்டு ஏனையோர் வியப்புறுவர் எனின் அன்னுரின் பண்புடைமையைப்பலபடப்பகர்வதன்றி வேறுவினையின்மை காண்க. எனவேவள்ளுவர் வாய்மொழிகள் யாவும் பொய்யாமொழிகளாய் நின்று தமிழர்க்குச்சான்று பகர்ந்து நிலைபெறுகின்றன.

ஆயின், அக்குறளுக்குத்,தெள்ளுபரிமேலழகர் செய்தவுரை என்றும், "பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெரி, என்றும்சிறப்பிக்கப்படும் பரிமேலழகர் உரையெழுதி யுள்ளனர். அவ்வுரையில் பொருந்தாக்கூற்றுக்களாய் பண்பில்உரைகள் பலப்பல. அவைகளெல்லாம்அறவேபுறதுத்தள்ளத்தக் கனவாம்! அவற்றுக்கெல்லாம்காரணம் காலத்தொடுநின்ற பண்பேயாகும்.

(தொடரும்)

மதுரையில்,

சந்திரோதயம்!

“நாட்டிலே சுயமரியாதை வேகம் மங்கிவிட்டதா, வளமாக இருக்கிறதா? என்பதைப் பரிட்சிக்கவே, இந்த நாடகத்தை நான் மதுரையில் நடத்த ஏற்பாடு செய்தேன். இன்று இங்கு கூடியுள்ள பெருந்திரளான கூட்டத்தைப் பார்க்கும்போது, மக்களுக்குச் சுயமரியாதை இயக்கத்தினிடம் பற்று, எப்போதும்போலவே இருந்துவருகிறது, ஆர்வம் கொஞ்சமும் குறையவில்லை என்பது விளக்கமாகத்தெரிகிறது. இதுபோன்ற அறிவுவளர்ச்சிக்கான நாடகங்கள் பல வேண்டும். நல்ல அமைப்புடன்கூடிய, ஒரு நாடகக்கம்பெனியை அமைத்து அதனைச் சிறந்ததோர் பிரசாரக்கருவியாக்க வேண்டும். அதற்காகக் குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் நிதிதிரட்டி, மூலதனமாக்கவும், பொறுப்புள்ள ஒரு நடிகர் கழகம் அமைக்கவும், நான் ஆசைப்படுகிறேன்” என்று மதுரைமாவட்ட ஆட்சிமன்றத் தலைவர், தோழர் W. P. A. சௌந்தரபாண்டியன், 8—4—44ல், மதுரை கோபால கிருஷ்ண டாக்கிசில் நடைபெற்ற “சந்திரோதயம்” நாடகத்தன்று கூறினார். நாகர்கோயில், தூத்துக்குடி, விருதுநகர், திருச்சி, கும்பகோணம் முதலிய பல ஊர்களிலிருந்தும் தோழர்கள் ஒரு மாநாட்டிற்கு வருவது போலவே நாடகத்திற்கு வந்திருந்தனர். கொட்டகை எங்கும் ஜனத்திரள். தலைமை வகித்த விருதுநகர் தோழர் V. V. இராமசாமி அவர்கள், நாட்டுமக்களுக்குப்பகுத்தறிவூட்டும் இத்தகைய நாடகங்கள் சுயமரியாதை உணர்ச்சியை வளர்க்கும் மக்களிடையே வளர்ந்துள்ள மூடநம்பிக்கைகளைப் போக்கிப் பகுத்தறிவை வளர்க்கும் பணியே மிகச்சிறந்தது, அரசியல்குழியில்விழுந்து, அனாவசியமாகச் சிரமப்படுவதைவிடச், சுயமரியாதைஇயக்கம், அரசியல்கட்சித்தொடர்பை அகற்றிக்கொண்டு, பழயபடி தீவிரமாகவேலை செய்யவேண்டும்” என்று பேசியதுடன், நாடகம், மக்களைமிகவும் உற்சாகப்படுத்தி உணர்ச்சி யூட்டியதைப் பாராட்டினார். நாடகமேடையிலே, “திராவிடநாடு” பத்திரிகைக்காக, மதுரை வட்டாரத்திலே திரட்டப்பட்ட நன்கொடை ரூபாய் 4000, கொண்ட பணமுடிப்பு, தோழர் அண்ணாத்துரையிடம் தரப்பட்டது. நாடகவசூல், செலவுபோக மிச்சமிருக்கும் தொகை, மதுரைநகரில், சுயமரியாதை இயக்கச் செலவு நிதியாக்கப்பட்டது. நாடகத்திற்கு, இயக்கத்தோழர்களும், உயர்தர அதிகாரிகளும் வந்திருந்தனர்.

நடிகர் நாராயணசாமி அவர்கட்கு நாடகமேடையிலேநண்பர்கள்சிலர், நூறு அரைரூபாய்கொண்ட பணமுடிப்பைப் பரிசளித்தனர். கரூர்த் தோழர் இங்கர்சால், தோழர் அண்ணாத்துரைக்கு, ஒரு வெள்ளிக்கோப்பையைப் பரிசளித்தார். திராவிடத் தொண்டர்படை, சுயமரியாதைச்சங்கம், பொதுஜன வாசகசாலை, ஆகியவைகள் தோழர்அண்ணாத்துரைக்கு வரவேற் புரைகள்அளித்தன.

காஞ்சித்திராவிட நடிகர் கழகத்தார், தோழர். V. V. இராமசாமி அவர்கட்கு ஒரு வரவேற்புரை அளித்தனர். தோழர் போளூர் சுப்பிரமணியம்அவர்கள் அதனை வாசித்தளித்தார். தோழர்கள் அண்ணாத்துரையும் ,நாராயணசாமியும், ஈழத்தடிகளும் தலைவர்களுக்கும் தோழர்களுக்கும் நன்றிகூறினர்.

நாடகம் வெற்றிகரமாக நடந்தேறவும், திராவிடநாடு பத்திரிகைக்கு, நிதிதிரட்டவும், தோழர் W. P. A. பாண்டியன் அவர்கள் எடுத்துக்கொண்ட நன்முயற்சியும், அதற்கு உதவியாகஇருந்த தோழர்கள் A. ஆறுமுகம், செந்தியப்பர், A. வேணுகோபால், A. பொன்னம்பலனார் ஆகியோருக்கும் நமது நன்றி உரித்தாகுக.

அடுத்த நாடகம்

கரூர்!

தமிழ் விருத்தியடையவழி!

2ம் பக்கத் தொடர்ச்சி.

தென்னாட்டுக் காவேரிக்கும் தாம்பிரவருணிக்கும், வைகைக்குமா தமிழ்தெரியாது.

இந்நதிகள்கூடத் தன்னிடம் குளிக்க வருகிறவர்கள் வடமொழியில் விண்ணப்பம் செய்துகொண்டால்தானே பாவத்தைப் போக்குகிறது. அதற்காகப் பார்ப்பானுக்கு நாலுஅணா கூலியுமுண்டு. தேவர்களிருக்கும் கைலயங்கிரியில் தேவமொழிதானிருக்கும், தமிழ் இருக்காது, கைலயங்கிரியில் சிவபெருமானின் சடையிலிருந்து வந்தகங்கைக்கும், கங்கையின்தங்கையான காவேரியை அகஸ்தியர் இங்கேகூட்டிவந்தார் என்று சொல்லுகிறது புராணம், அதனால் காவேரிக்கும் தமிழ்தெரியாமல் இருக்கட்டும். திருநெல்வேலித் தமிழ்த்தாம்பிரவருணிக்கும், மதுரைச் சங்கத்தமிழ் வைகைக்கும் தமிழ்தெரியாமல் போனதற்குக் காரணத்தை ஆலோசித்துப் பாருங்கள்.

தமிழ்வேதமான தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, இவற்றைக்கேட்டுக் கடவுள்சமயஆசாரிகளுக்குக்காட்சிஅளிக்கவில்லையா? அதைபடித்துப்பாராயணம் செய்து பரலோகம் போனபக்தர்களில்லேயா? என்று கேட்கலாம். இதைக்கோவில் ஆச்சாரி, குரு, புரோகிதன் முதலியவர்கள் இன்று வரையிலும் ஒத்துக்கொள்ளவில்லையே. புராணத்தில், பண்டிதர்கள் சொல்லில், எழுத்தில் இருக்கிறது. குருவிடத்தில் தெய்வசன்னதியில், அபிஷேகஅர்ச்சனை, ஆராதனையில்இல்லையே. தேவாரத்தைக்கூட வெளிப்பிராகாரத்திலிருந்து சுவாமிக்கு அர்த்தமாகும் மொழியில் உபசாரணை எல்லாம் சொல்லிக்கற்பூர ஆராத்திஎடுத்துப், பார்ப்பானுக்கு ஆராதனையும் காட்டினபின்தானேபாடவேண்டிஇருக்கிறது. தேவாரத்தைப்பண்டாரப் பாட்டு என்று சொல்லுவதை நீங்கள் கேட்டதில்லையா? அப்பர்சாமிகளைச் சூத்திரனென்று தள்ளிவைப்பதும் அவர்பின்னால் வேதம்சொல்ல மறுப்பதும் நாலணா அதிகம் கொடுத்தால் சொல்லுவதும், சைவர்களுக்குத் தெரியாதா? ஆகவே நம்முடைய தெய்வம் வழிபாடு, இழவு, எட்டு, சருமாந்திரம் முதலியவைகளுக்கருமங்களிலும் தமிழ்மொழி தெரியாததேவதைகளை வைத்துக்கொண்டுதமிழ்மொழியை எப்படிவிருத்தி செய்யமுடியும். அந்தத்தெய்வங்களைநாம்குடிவைத்த நன்றிக்குஅவைகளாகவேவந்து தமிழ்கற்றுக்கொள்ளாது. நாமேஅவைகளுக்குத்தமிழ் கற்றுக்கொடுக்கவேண்டும். எப்படி எனில், குரான், அரபிபாஷையாக விருப்பதால் துருக்கியர்களுக்கு குரானை ஓதுவதுகஷ்டமாக இருக்கிறதென்று குரானை துருக்கி பாஷையிலே ஓதும்படி கனம் கமால்பாஷா அவர்கள் உத்தரவு போட்டார் என்பதை நீங்கள்எல்லாம் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். அதுபோல நமது தெய்வக்கருமாந்திரங்களெல்லாம் வடமொழியிலிருப்பதால்நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. தென்மொழியும் நமது கடவுள்களுக்குதெரிவதில்லை. இனிதெய்வ வழிபாட்டிற்கும் கருமங்களுக்கும் உள்ள மந்திரங்கள் எல்லாம் தமிழிலேயே சொல்லிவிட்டோமானால் நமது தெய்வங்களுக்கும் தமிழ்தெரிந்துவிடும். அதன் குறைபாடும்நீங்கும். அரபிபாஷைத்தெய்வம், துருக்கிபாஷையை ஒத்துகொள்ளுகையில்,சமஸ்கிருதபாஷைத் தெய்வம், தமிழ்ப் பாஷையைஒத்துக்கொள்ளாதா? அரபிபாஷைத்தெய்வத்திற்குத்துருக்கிபாஷை அர்த்தமாகுகையில், வடமொழித் தெய்வத்திற்குத் தென்மொழி அர்த்தமாகாதா?

திருமணம்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு ஹெட்கிளார்க் R. பெருமாள் நாயுடு அவர்களின் திருக்குமாரன் வேணுகோபால் B. A; B. L; அவர்களுக்கும் திருமலைராயன் பட்டினம் R. சஞ்சீவி செட்டியார் அவர்களின் குமாரத்திவிஜயலெட்சுமிக்கும் திருமணம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at “Dravida Nadu” Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.